# நிதிநிலை அறிக்கை

## 2024 – 2025

**தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19ஆம் நாள் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆற்றும் உரை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை நூற்றாண்டு கண்ட இந்த சட்டமன்றப் பேரவையின் முன் வைப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இந்தியத் திருநாட்டின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குவதில் தொடர் வழிகாட்டுதலை நல்கிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

2. காலத்தை வென்ற அய்யன் திருவள்ளுவரின் குறளை இம்மன்றத்தில் பதிவு செய்து என் உரையைத் தொடங்குகிறேன்.

**“காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**

**மீக்கூறும் மன்னன் நிலம்”.**

**(குறள் – 386)**

குடிமக்கள் எவரும் எளிதில் அணுகக்கூடியவராகவும், எவரிடத்திலும் கடுமையான சொற்களைக் கூறாது ஆட்சிபுரிந்து வரும் அரசரின் நாட்டை உலகமே போற்றும்.

**வள்ளுவரின் வாக்கு என்றுமே பொய்க்காது!**

3. கடைக்கோடித் தமிழர்களும் எளிதில் அணுகக் கூடிய ஒப்பற்ற தலைவராகவும், கடுஞ்சொல் தவிர்த்து மாற்றுச் சிந்தனை கொண்டவர்களையும் அன்போடு அரவணைத்துச் சென்றிடும் பெருந்தன்மைக்கு இலக்கணமாகவும் திகழ்ந்து வரும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டிற்கே பெருமை.

4. எனது உரையின் முன்னோட்டமாக வரலாற்றுச்சுவடுகளில் தடம் பதித்து தலைசிறந்த நிகழ்வுகள் சிலவற்றை இம்மாமன்றத்தின் கனிவான பார்வைக்கு முன்வைத்திட விழைகிறேன். கடந்த நூறு ஆண்டுகளில் பழம்பெருமை மிக்க இந்த சட்டமன்றத்தின் முன்வைக்கப்பட்ட

நிதிநிலை அறிக்கைகளில் இடம்பெற்ற பல்வேறு நலத்திட்டங்கள் தமிழரைத் தலைநிமிரச் செய்தன. இத்தகைய முன்முயற்சிகள் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு வெற்றிநடை போடுவதற்கு வழிவகுத்தன.

- ❖ கடந்த 1894-ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாகாணத்தின் பொதுப்பணித்துறை செயலாளராகப் பதவி வகித்த கர்னல்.பென்னிகுயிக், 87 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஆங்கிலேயே அரசிற்கு அனுப்பி வைத்த முன்மொழிவுதான், முல்லைப் பெரியாறு அணையாக உருவெடுத்து இன்றளவும் தென் தமிழ்நாட்டை வாழவைத்துக் கொண்டிருக்கிறது.

- ❖ மிகச்சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன், 1924-ஆம் ஆண்டு, நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் பனகல் அரசர் அவர்கள் அன்றைய சென்னை மாகாணத்தின் முதன்மை அமைச்சராக இருந்தபோது, இந்தப் பேரவையில் முன்வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில்தான் முதன்முதலில் காவிரி ஆற்றின் குறுக்கே மேட்டூர் நீர்த்தேக்கம் உருவாக்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. பத்து ஆண்டுகள் கழித்து 1934-35-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைவரை நிதி ஒதுக்கப்பட்டு, மொத்தம் 647 இலட்ச ரூபாய் செலவில் உருவாக்கப்பட்ட மேட்டூர் நீர்த்தேக்கம் மூலம் இன்று தமிழ்நாட்டின்

12 மாவட்டங்களிலுள்ள சுமார் 16 இலட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

- இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை மாகாணத்தில்தான் 1939-40-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு சதவீத பொது விற்பனை வரி மூலமாக முதலாம் ஆண்டில் 439 இலட்சம் ரூபாய் வரி வருவாய் திரட்டப்பட்டது.

- முதன் முதலில் 1921-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராக பதவி வகித்த சர் பிட்டி தியாகராயர் அவர்களால் ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு ஓர் அணா செலவில் சென்னை ஆயிரம் விளக்குப் பள்ளியில் அறிமுகப்படுத்தப்பட்ட மதிய உணவுத் திட்டம் பிற்காலத்தில் பெருந்தலைவர் காமராஜரால் தமிழ்நாடெங்கும் விரிவுபடுத்திட ஒரு மாணவருக்கு ஓர் ஆண்டிற்கு 18 ரூபாய்க்கு மிகாமல் மொத்தம் 10 இலட்ச ரூபாய் 1957-58-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- ஏழை, எளிய மக்களின் கண்ணியமான வாழ்வை உறுதி செய்திட முத்தமிழறிஞர் கலைஞரால் 1970-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட குடிசை மாற்று வாரியத்திற்கு 1971-72-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

- மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னாளில் நாடு முழுதும் விரிவுபடுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்திற்கு 1982-83 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

- வேளாண்குடி மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் விதமாக முத்தமிழறிஞர் கலைஞரால் 1990-ஆம் ஆண்டில் முதன் முதலில் அறிவிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இலவச மின்சாரத் திட்டத்திற்கு முதலாமாண்டில் 550 கோடி ரூபாய் மானியத்தொகை ஒதுக்கப்பட்டது.

- 2001-02-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மேல்நிலைக் கல்வி பயிலும் ஆதி திராவிடர்-பழங்குடியின பெண் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியை உயர்த்தும் நோக்கோடு 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் அறிமுகப்படுத்தப்பட்ட மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தின் வாயிலாக அம்மாணவியரின் வாழ்வு சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது.

- ஏழை, எளிய குடும்பங்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்து நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்த ஒரு ரூபாய் விலையில் ஒரு கிலோ அரிசித் திட்டத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அறிமுகப்படுத்தி 2009-10-ஆம்

ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 2800 கோடி ரூபாய் மானியத் தொகையை ஒதுக்கினார்.

5. இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க திருப்புமுனைத் திட்டங்களின் வரிசையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட காலை உணவுத் திட்டத்திற்கு 2023-24 -ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதும், திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்டத்திற்கு 7000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதையும் இந்த சட்டமன்ற வரலாறு பொன்னெழுத்துக்களால் தன் நினைவுப் பேழையில் என்றென்றும் குறித்து வைத்துக்கொள்ளும்.

6. காலத்தை வென்று நிலைத்து நிற்கும் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களால்தான், தமிழ்நாடு வளர்ச்சிப்பாதையில் கம்பீரமாகப் பயணித்து வருகிறது. ஏழை, எளிய மக்களின் நல்வாழ்வு குறித்த அளவற்ற கருணையும், அந்நோக்கத்தை நிறைவேற்றிடத் தேவையான நிதி ஒதுக்கீடும் முறையாக அமைந்ததால் நமது மாநிலம் முன்னேற்றத்தை அடையத் தொடங்கியது.

7. "**கருணையும், நிதியும்**" ஒன்றாகச் சேரும் போதெல்லாம் தமிழர் தலைநிமிர்ந்தனர்; தமிழ்நாடு வளம் பெற்றது என்பதை நாடறியும். இம்மாமன்ற உறுப்பினர்களும் அதை வழிமொழிவார்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

8. இந்த வரவு செலவுத் திட்டத்தை உருவாக்கிட வழிகாட்டியாக அமைந்தவை பேரறிஞர் அண்ணாவின் சொல்லோவியம்தான். நிதியமைச்சராகவும் பொறுப்பு வகித்த பேரறிஞர் அண்ணா 1967-68-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் பொழுது "**இந்த வரவு செலவுத் திட்டத்தில் மூன்றரை கோடி மக்களுடைய வாழ்வும்**, **தாழ்வும் இந்த** 64 **பக்கங்களில் அடங்கியிருக்கின்றன. நம்முடைய இதயமும் அதிலே கலக்கப்பட்டிருக்கிறது. நம்மைத் தேர்ந்தெடுத்த மக்களின் இலட்சியங்கள் இதில் அடங்கியிருக்கின்றன**" என்று குறிப்பிட்டார்.

9. அறிஞர் அண்ணாவின் அறிவுரைகளைத் தாங்கியே இந்த வரவு செலவுத் திட்டத்தை வெறும் புள்ளிவிவரக் குவியலாக இல்லாமல் கடைக்கோடித் தமிழரின் எண்ணங்களின் அணிவகுப்பாக மாற்றிட முயன்றிருக்கிறோம். மேலும், பல்வேறு எதிர்பாரா நெருக்கடிகளுக்கு இடையே தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை வழிநடத்த வேண்டிய சூழலில் நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

10. ஆழிசூழ் தமிழ் நிலப்பரப்பிற்குள் அழையா விருந்தினர் போல் அவ்வப்போது வருகை புரிந்து இன்னல்கள் பல கொடுத்திடும் இயற்கைப் பேரிடர்கள் ஒருபுறம்; கூட்டாட்சித் தத்துவத்தை அடியோடு மறந்து மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்ளும் ஒன்றிய அரசு மறுபுறம்; இதற்கிடையே தமிழ்நாட்டை வளர்ச்சிப்பாதையில் அழைத்துச் செல்ல உதவும் வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கிட வேண்டிய தேவை எழும்போதெல்லாம், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழிகாட்டுதல்கள் மட்டுமே கலங்கரை விளக்கமாய் எங்களுக்கு அமைந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

11. **"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" எனச் செயல்பட்டு வரும் நமது மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசுக்கென ஒரு மாபெரும் தமிழ்க்கனவு உண்டு. வானவில்லின் வண்ணங்களைப் போன்று ஏழு முதன்மையான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட தமிழ்க் கனவு அது.**

1. **சமூக நீதி**
2. **கடைக்கோடித் தமிழர் நலன்**
3. **உலகை வெல்லும் இளைய தமிழகம்**
4. **அறிவுசார் பொருளாதாரம்**
5. **மகளிர் நலன் காக்கும் சமத்துவப் பாதை**
6. **பசுமைவழிப் பயணம்**
7. **தாய்த் தமிழும் தமிழர் பண்பாடும்.**

இந்த ஏழு இலக்குகளை முன்வைத்தே இந்த வரவு செலவுத் திட்டம் அமையப் பெற்று இருக்கிறது.

**தமிழ்மொழி வளர்ச்சி**

12. தமிழர்களின் ஒற்றுமை, அரசியல் நேர்மை, குடிமக்கள் உரிமை, வணிகச் சிறப்பு, சமய நல்லிணக்கம், பசிப்பிணி ஒழிப்பு மற்றும் பெண்ணியம் உள்ளிட்ட சமூகச் சிந்தனைகள், பண்பாட்டு மரபுகள் ஆகியவற்றை எடுத்துரைக்கும் தமிழின் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவை 25 இந்திய மற்றும் உலக மொழிகளுக்குச் சென்றடையும் வகையில், அவற்றை மொழிபெயர்க்க 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

13. நமது செழுமையான தமிழ் இலக்கியப் படைப்புகளை உலகம் முழுவதும் எடுத்துச் செல்லவும், சிறந்த பன்னாட்டு அறிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களின் படைப்புகளைப் பெற்றுத் தமிழில் பல புதிய படைப்புகளை உருவாக்கவும் தமிழ்நாடு அரசு, சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சியை இரண்டாவது ஆண்டாக வெற்றிகரமாக நடத்தியது. இதில் 40 நாடுகளில் இருந்து 75க்கும் மேற்பட்ட பதிப்பாளர்கள் மற்றும் இலக்கிய முகவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் தமிழ்ப் படைப்புகளை பிற மொழிகளுக்கு மொழி பெயர்க்க

483 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உட்பட, மொத்தம் 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

14. கடந்த இரு நூற்றாண்டுகளில் பல்வேறு உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்நூல்களை விட இரண்டு மடங்கு தமிழ்நூல்களை, தற்போது இரண்டே ஆண்டுகளில் மொழிபெயர்த்திட இவ்வரசு முன்முயற்சி எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழின் மிகச்சிறந்த நூல்களை உலகின் தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களிலும், புகழ்பெற்ற நூலகங்களிலும் இடம்பெறச் செய்ய இவ்வாண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும். **தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவிடச் செய்யும் இம்முயற்சிக்கு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.**

15. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவராக பதவியேற்றிருந்த காலத்தில் கல்லூரி மாணவர்களுக்கான 32 துறைகள் சார்ந்த 875 கலை, அறிவியல் பாடநூல்களை தமிழ்வழியில் வெளியிட்டு சாதனை படைத்தார்.

அவர் வகுத்துத் தந்த பாதையில் பயணித்து, தற்போது, கலைஞர் நூற்றாண்டில் தமிழ்நாடு பாடநூல் கழகம் இதுவரை 340 மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், இலக்கிய மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டுள்ளது. அடுத்த 3 ஆண்டுகளில் மேலும் 600 முக்கிய நூல்கள் தமிழில் வெளியிடப்படும்.

16. 25 ஆண்டுகளுக்கு முன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னின்று நடத்திய தமிழ் இணையம் – 99 மாநாட்டிற்குப் பிறகு, இந்த ஆண்டு வெற்றிகரமாக நடைபெற்ற கணித்தமிழ்-24 மாநாட்டில் உலகெங்கிலும் இருந்து தமிழறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், மின்னணு வணிக நிறுவனங்களுடைய நிர்வாகிகள் கலந்துகொண்டு வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் தமிழுக்கான இடம் குறித்து ஆக்கபூர்வமாக விவாதித்து பல செயல்திட்டங்களை உருவாக்கியுள்ளனர். அதன்படி துரிதமாக வளர்ந்துவரும் தொழில்நுட்பப் பரப்பில் தமிழ்மொழி செழித்து வளரத் தேவையான இயந்திரவழிக் கற்றல் (Machine Learning) செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயற்கைமொழிச் செயலாக்கம் (Natural Language

Processing), பெருந்திரள் மொழி மாதிரிகள் (Large Language Models) போன்ற புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கிடும் புத்தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி அளித்திட இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

17. தமிழ் இணைய கல்விக்கழகம் உருவாக்கியுள்ள தமிழ் மின் நூலகம் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய மின் நூலகமாகத் திகழ்ந்து வருகிறது. 90 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்நூல்கள், பருவ இதழ்கள், அரிய ஆவணங்கள் மற்றும் 8 இலட்சம் ஓலைச்சுவடிப் பக்கங்கள் இந்த நூலகத்தில் காணக் கிடைக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 5 கோடி முறை இந்த இணையதளம் பயனர்களால் பார்வையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. தமிழ்மொழியின் வளம், தமிழரின் தொன்மை குறித்து எதிர்காலத் தலைமுறையினருக்கும் கொண்டு சேர்த்திடும் வகையில் தமிழ்நாடெங்கும் உள்ள அரிய நூல்கள் மற்றும் ஆவணங்களை மின்பதிப்பாக மாற்றும் முயற்சிக்கு இந்த ஆண்டு 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

**பழங்குடி மொழி வளங்களை ஆவணப்படுத்துதல்**

18. தமிழ்நாட்டில் பேசப்படும் சௌராஷ்டிரா, படுக மொழிகளையும் தோடர், கோத்தர், சோளகர், காணி, நரிக்குறவர் உள்ளிட்ட பல்வேறு பழங்குடியின மக்களின் மொழி வளங்கள் மற்றும் ஒலி வடிவங்களையும் எதிர்காலத் தலைமுறையினருக்குப் பயன்படும் வகையில் இனவரைவியல் (Ethnography) நோக்கில் ஆவணப்படுத்திப் பாதுகாக்க தமிழ்நாடு அரசு 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திடும்.

**பண்பாடு**

19. கீழடி எனும் ஒற்றைச்சொல் தமிழர்தம் மரபுவழிப் பயணத்தில், தலைமுறைகளைத் தாண்டி உலகத் தமிழர்களை ஒன்றிணைத்தது. கூடல் மாநகருக்கு அருகே வைகைக் கரையில் சங்ககாலத்தில் செழித்து வளர்ந்த நகர நாகரிகத்தினை தொல்லியல் அகழ்வாராய்ச்சி மூலம் வெளிக்கொணர்ந்ததை ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமே கொண்டாடி மகிழ்ந்தது. தமிழரின் நீண்ட நெடிய பண்பாட்டு மரபினை மொழி, வரலாறு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் துணைகொண்டு, சான்றுகளின் அடிப்படையில் அறிவுலகம் ஏற்றுக்கொள்ளும்

வகையில் உறுதியாக நிறுவிடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது.

20. அந்த வகையில் தமிழ்நாட்டில் 2024-25 ஆம் ஆண்டில் சிவகங்கை மாவட்டம் - கீழடி, விருதுநகர் மாவட்டம் - வெம்பக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் - பொற்பனைக்கோட்டை, திருவண்ணாமலை மாவட்டம் - கீழ்நமண்டி, தென்காசி மாவட்டம் - திருமலாபுரம், திருப்பூர் மாவட்டம் - கொங்கல்நகரம், கடலூர் மாவட்டம் - மருங்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம் - சென்னானூர் என மொத்தம் எட்டு இடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு மட்டுமின்றி பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் காலச்சுவடுகளைத் தேடி கேரள மாநிலத்திலுள்ள முசிறி (பட்டணம்), ஒடிசா மாநிலத்திலுள்ள பாலூர், ஆந்திர மாநிலத்திலுள்ள வெங்கி, கர்நாடகத்திலுள்ள மஸ்கி ஆகிய தொல்லியல் சிறப்புமிக்க இடங்களிலும் இந்த ஆண்டு அகழாய்வு மேற்கொள்ளப்படும். மேற்கூறிய பகுதிகளில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ள தொல்லியல் துறைக்கு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். **அகழ்வாராய்ச்சிக்கென**

**நாட்டிலேயே ஒரு மாநிலத்தில் இவ்வளவு அதிக நிதியை தமிழ்நாடு அரசுதான் தொடர்ந்து வழங்கி வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

21. தேசிய கடல்சார் தொழில்நுட்பவியல் நிறுவனம் மற்றும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களோடு இணைந்து, கொற்கை மற்றும் சங்ககாலப் பாண்டியரின் துறைமுகமான அழகன்குளம் ஆகிய பகுதிகளின் கடலோரங்களில் 65 இலட்சம் ரூபாய் செலவில் முன்கள ஆய்வும் அதனைத் தொடந்து ஆழ்கடல் ஆய்வும் மேற்கொள்ளப்படும்.

22. கீழடி அகழாய்வுகளில் வெளிப்படுத்தப்பட்ட சங்ககால செங்கல் கட்டுமானங்கள், உறைகிணறுகள், தொழிற்கூடப் பகுதிகள் ஆகியவற்றை பொதுமக்களும், எதிர்காலத் தலைமுறையினரும் நேரடியாகக் கண்டு உணரும் வகையில், கீழடி அகழாய்வுத் தளத்தில் திறந்தவெளி தொல்லியல் அருங்காட்சியகம் (Open Air Museum) ஒன்று 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். மேலும், நவீன மரபணுவியல் தொழில்நுட்பங்களைக் கொண்டு தமிழ்மக்களின் மரபணுத்

தொன்மை, இடப்பெயர்வு, வேளாண்மை, பண்பாட்டு நடைமுறைகள் மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களைக் கண்டறிய மதுரை காமராசர் பல்கலைக்கழக மரபியல் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தொல்மரபணுவியல் ஆய்வகம் மூலம் தொல்மரபியல் ஆய்வினை மேற்கொள்வதற்கு 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

23. சிந்துவெளிப் பண்பாடு குறித்து முதன்முதலில் இந்தியத் தொல்லியல் துறையின் தலைவராக இருந்த சர் ஜான் மார்ஷல் அவர்களால் 1924-ஆம் ஆண்டு அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்நிகழ்வை நினைவுகூறும் வகையில் சிந்துவெளிப் பண்பாட்டு நூற்றாண்டுக் கருத்தரங்கம், பன்னாட்டு அறிஞர்கள் கலந்து கொள்ளும் வகையில் இந்த ஆண்டு சென்னையில் நடத்தப்படும்.

**ஊரக வளர்ச்சி**

24. இருபத்தியோராம் நூற்றாண்டிலும், இன்றளவும் கிராமப் பகுதிகளில் வறுமையின் அடையாளமாக எஞ்சியிருப்பவை குடிசைகளே. குடிசைகளில் வாழ்ந்திடும்

குடும்பங்கள் பாதுகாப்பான நிரந்தர வீடுகளுக்கு இடம்பெயரும்போது, ஏற்றத்தாழ்வு கொண்ட இந்தச் சமூகத்தில் அவர்கள் சுயமரியாதையுடன் தங்கள் வாழ்வைத் தொடர்ந்திடக் கிடைக்கும் பெரும் வாய்ப்பாகவே அது அமைந்திடும். இவற்றை எல்லாம் உணர்ந்துதான், நாட்டிலேயே முதன்முறையாக ஊரகப் பகுதிகளில் ஏழைக் குடும்பங்கள் வசிக்கும் குடிசைகளுக்குப் பதிலாக நிரந்தர வீடுகள் கட்டித்தரும் முன்னோடித் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1975 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த 2010 ஆம் ஆண்டு குடிசையில்லா மாநிலம் என்ற இலக்கை எய்திடும் வகையில் 'கலைஞர் வீடு வழங்கும் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது.

25. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் குடிசைகளை மாற்றி அனைவருக்கும் பாதுகாப்பான நிரந்தர கான்கிரீட் வீடுகளை அமைத்துத் தரும் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட சமீபத்திய கணக்கெடுப்பின்படி, கிராமப்பகுதிகளில் ஏறத்தாழ எட்டு இலட்சம் குடிசைவீடுகளில் மக்கள் வாழ்ந்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. '**குடிசையில்லா தமிழ்நாடு**'

**என்ற இலக்கினை எய்திடும் வகையில், வரும் 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் எட்டு இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும். முதற்கட்டமாக, 2024-25 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் ஒவ்வொன்றும் 3.50 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

26. தேர்தெடுக்கப்பட்ட பயனாளிகளில் சொந்தமாக வீட்டுமனை இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்குவதுடன், வீடு கட்டுவதற்கான தொகை அவர்தம் வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தப்படும். அறிவியல்பூர்வமான கணக்கெடுப்பு, வெளிப்படையான பயனாளிகள் தேர்வு முறை, தங்கள் கனவு இல்லங்களை பயனாளிகள் தாங்களே உருவாக்கிக் கொள்ளும் வாய்ப்பு என குறிப்பிடத்தக்க அம்சங்களைத் தாங்கிய **இப்புதிய திட்டம் 'கலைஞரின் கனவு இல்லம்' என்ற பெயரில் வரும் நிதியாண்டில் 3,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

27. தரமான சாலை வசதிகளை கடைக்கோடி கிராம மக்களும் எளிதில் பெற்றுப் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட, "முதல்வரின் கிராமச் சாலைகள்

மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் 2024-25 ஆம் ஆண்டில், 2,000 கிலோமீட்டர் சாலை மேம்பாட்டுப் பணிகள் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

28. தமிழ்நாட்டில் அனைத்து குக்கிராமங்களும் அடிப்படை வசதிகளைக் கொண்டு தன்னிறைவு பெற்றிடும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II இன் கீழ். 2024-25 ஆம் ஆண்டில் 2,482 கிராம ஊராட்சிகளில் 1,147 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

29. 105 ஆண்டுகளுக்கு முன்பே, 1919 ஆம் ஆண்டிலேயே, காவிரி ஆற்றில் இருந்து நீரேற்றம் செய்து, ஐந்து இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர்த்தேக்கம் செய்து, ஈரோடு நகரெங்கும் குழாய் பதித்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் முன்னோடித் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகம் செய்து நிகழ்த்திக் காட்டியவர் அன்றைய ஈரோடு நகர்மன்றத் தலைவராகப் பதவி வகித்த தந்தை பெரியார் அவர்கள்.

“மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு” என முழங்கி, தமிழ்ச்சமூகத்தை வழிநடத்திய தந்தை பெரியார், உள்ளாட்சி அமைப்புகளின் முதன்மையான பணியாக பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை முன்னிறுத்தி, அத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியும் காட்டினார் என்பது நமக்கெல்லாம் பெருமை. தந்தை பெரியாரின் வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’, கடந்த மூன்று ஆண்டுகளில் ஊரகப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு 46 இலட்சம் குடிநீர் இணைப்புகளை வழங்கியுள்ளது. மேலும், **ஊரகப் பகுதிகளில் உள்ள பழைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குப் பதிலாக, 365 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,000 புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இந்த ஆண்டு அமைக்கப்படும்**.

30. நாட்டிலேயே நகரமயமாக்கம் அதிகம் காணப்படுவது தமிழ்நாட்டில் தான். நகரமயமாதல் என்னும் வளர்ச்சிப் பாதையில் சென்னைப் பெருநகர மாநகராட்சி உள்ளிட்ட பல மாநகராட்சிகளை ஒட்டிய விரிவாக்கப் பகுதிகளுக்குத்

தேவையான சாலை வசதிகள், குடிநீர் இணைப்பு மற்றும் தெருவிளக்கு வசதிகள் உருவாக்கித் தர வேண்டியதன் அவசியத்தை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு **மாநகராட்சிப் பகுதிகளை அடுத்துள்ள விரிவாக்கப் பகுதிகளில், வரும் ஆண்டில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்**.

31. 'விண்ணின் மழைத்துளி மண்ணின் உயிர்த்துளி' என்ற சொற்றொடரை முழுவதுமாக உள்வாங்கி, கல்லணை முதல் சங்கிலித்தொடர் ஏரிகள், குளங்கள் என நீர் மேலாண்மையின் உச்சத்தை தமிழ்ச் சமூகம் 2000 ஆண்டுகளுக்கு முன்பே எட்டியிருந்தது. ஆனால், காலப்போக்கில் இந்த நீர்நிலைகள் ஆங்காங்கே பராமரிப்பு இன்றியும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியும் தன் நிலையை இழந்து வருகின்றன. இந்தச் சூழலில் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய சிறுபாசன ஏரிகள், குளங்கள் மற்றும் வரத்துக் கால்வாய்களைச் சீரமைத்து மேம்படுத்தி, இயற்கையை மீட்டெடுக்கும் பெரும் முயற்சியாக **இந்த ஆண்டில் சுமார் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைசிறந்த**

**அறிவியல் நிறுவனங்களின் வழிகாட்டுதலுடன் மக்கள் பங்களிப்போடு 5,000 நீர்நிலைகளைப் புனரமைக்கும் பெரும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்**.

32. ஊரகப் பகுதிகளில் ஏழை எளிய மக்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பு வழங்கிடும் விதமாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை நாட்டிலேயே மிகச் சிறப்பாகச் செயல்படுத்திடும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வரும் 92 இலட்சம் பயனாளிகளில், 26 இலட்சம் ஆதி திராவிடர்களும் 1.6 இலட்சம் பழங்குடியினர்களும் அடங்குவர். அதிலும் குறிப்பாக, 79 இலட்சம் பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவது குறிப்பிடத்தக்கது. 2024-25 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 3,300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

33. நெகிழிக் கழிவுகள் உள்ளிட்ட மட்காத குப்பைகள், கிராமப்புறங்களின் சுற்றுச்சூழலை மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகிடுவதைத் தவிர்க்க, முறையான திடக்கழிவு

மேலாண்மைக் கட்டமைப்புகளை உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் உருவாக்கி, மட்காத குப்பைகளை முறையாகச் சேகரித்து மறுசுழற்சி செய்தல், தொழில் நிறுவனங்களின் எரிபொருள் பயன்பாட்டிற்கு வழங்குதல் போன்ற பணிகளைச் செயல்படுத்தி சுகாதாரமான தமிழ்நாட்டை உருவாக்கிடும் நோக்கோடு, ஒரு புதிய நிறுவனம் ஏற்படுத்தப்படும்.

**வறுமை ஒழிப்பு**

34. கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக நாட்டிற்கே முன்னோடியாக விளங்கிடும் வகையில், தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பல சமூகநலத் திட்டங்களின் வாயிலாக வறுமையை குறைப்பதில் நமது மாநிலம் மிகச் சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளது. அதை அங்கீகரிக்கும் வகையில் ஒன்றிய அரசின் 'நிதி ஆயோக்' சமீபத்திய தனது அறிக்கையில் பன்முக வறுமைக் குறியீட்டின்படி, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் சதவீதம் மிகக் குறைவாக 2.2 சதவீதம் மட்டுமே என அறிவித்துள்ளது. இருப்பினும், தற்போது மிகவும் வறியநிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் கடைக்கோடி ஏழைக் குடும்பங்களையும்

கண்டறிந்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிட அரசு முடிவு செய்துள்ளது. **அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் மிகவும் வறியநிலையில் உள்ள சுமார் ஐந்து இலட்சம் ஏழைக் குடும்பத்தினருக்கு அரசின் உதவிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து வழங்கி, விரைவில் அவர்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்திட அரசு உறுதியாக உள்ளது**.

35. ஆதரவற்றோர், தனித்து வாழும் முதியோர், ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள், மனநலம் குன்றியவர்கள், மாற்றுத்திறனாளிகள், சிறப்புக் குறைபாடு உடைய குழந்தைகள் உள்ள குடும்பங்கள் போன்ற சமூகத்தின் விளிம்புநிலையில் வாழ்ந்திடும் மக்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மட்டுமன்றி கல்வி, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, வீடுகள் போன்ற அனைத்து உதவிகளும் வழங்கப்படும். அரசிடம் உள்ள தரவுகள், கள ஆய்வு, மக்கள் பங்கேற்புடன் கலந்துரையாடல், கிராமசபை ஆகியவற்றின் மூலம் மாநிலம் முழுக்க மிகவும் ஏழைக் குடும்பங்கள் கண்டறியப்படும். '**முதலமைச்சரின் தாயுமானவர்**

**திட்டம்**’ என்ற பெயரிலான இப்புதிய திட்டத்தில், மக்கள் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் பங்கேற்பும் உறுதி செய்யப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு 27,922 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்**

36. தமிழ்நாட்டில் நகர்ப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு, பொது சுகாதாரம், இணைப்புச் சாலைகள், தெருவிளக்குகள், நவீன மின் மயானம், நூலகங்கள் மற்றும் கணினியுடன் கூடிய அறிவுசார் மையங்கள், பாதாளச் சாக்கடை மற்றும் சமுதாய அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கும் நோக்கத்தோடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் 1,328 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் முடிவுற்று 1,659 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினைச் செயல்படுத்திட, வரும் நிதியாண்டில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். அம்ருத் 2.0 திட்டத்தில், 4,942 கோடி ரூபாய்,

ஒன்றிய அரசு பங்களிப்புடனும் 9,047 கோடி ரூபாய் மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடனும், திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **2024-25 ஆம் ஆண்டில், பல்வேறு திட்ட நிதிகளைத் திரட்டி நகர்ப்புர உள்ளாட்சிப் பகுதிகளில் 4,457 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 2,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்**.

37. சென்னை பெருநகர மாநகராட்சியில் நவீன, உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் 42 விரிவாக்கப் பகுதிகளில் கட்டமைப்பை மேம்படுத்தவும் “சிங்காரச் சென்னை 2.0” திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியது. இதுவரை, கடந்த 3 ஆண்டுகளில் 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,183 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கு வரும் நிதியாண்டு 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

38. விரைவான நகரமயமாக்கலின் விளைவாக, சென்னை மாநகரத்தில் வாகனப் போக்குவரத்து பன்மடங்காக அதிகரித்துள்ளதால் ஏற்படும் கடும் போக்குவரத்து நெரிசலைத்

தவிர்க்க, சென்னையில் அதிகப் போக்குவரத்து நெரிசல் கொண்ட சாலைகள் அகலப்படுத்துவதற்காகக் கண்டறியப்பட்டுள்ளன. அதன் முதற்கட்டமாக, புதிய ஆவடி சாலை, பேப்பர் மில்ஸ் சாலை மற்றும் செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலைகளை 18 மீட்டராகவும், டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை மற்றும் கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலைகளை 30.5 மீட்டராகவும் வளர்ச்சி உரிமைப் பரிமாற்ற (TDR) முறையில் அகலப்படுத்தும் திட்டம், சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

39. சிங்காரச் சென்னையை உருவாக்கும் நோக்கோடு சென்னை தீவுத்திடலில் இயற்கை வனப்புடன் கூடிய நகர்புரப் பொதுச் சதுக்கம், கண்காட்சி அரங்குகள், திறந்தவெளி திரையரங்கம் போன்ற நவீன சமூகக் கட்டமைப்பு வசதிகளை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் 104 கோடி ரூபாய் செலவில் மேற்கொண்டு வருகிறது. மேலும், சென்னை கடற்கரையோரப் பகுதிகளை அழகுற சீரமைத்து மேம்படுத்திடும் நோக்கோடு கோவளம், எண்ணூர், பெசன்ட் நகர் ஆகிய கடற்கரைப் பகுதிகள் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வசதிகளுடன் மெருகூட்டி அழகுபடுத்தப்படும்.

40. நாட்டிலேயே மிக வேகமாக வளர்ந்துவரும் நகரங்களில் ஒன்றான சென்னை மாநகரத்தின் சில பகுதிகளில், குறிப்பாக, வடசென்னையில் போதிய அளவு அடிப்படை வசதிகளும் கட்டமைப்புகளும் இல்லாத நிலை உள்ளது. **சென்னை மாநகரில் சமச்சீர் வளர்ச்சியை உறுதி செய்ய "வடசென்னை வளர்ச்சித் திட்டம்" எனும் புதிய முயற்சியை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.** இத்திட்டத்தின் கீழ், வாட்டர் பேசின் (water basin) சாலையில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் புதிய குடியிருப்புகள், எழும்பூரில் குழந்தைகள் நல மருத்துவமனையில் 53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய உயர்தர சிகிச்சைப் பிரிவு (Super speciality block), இராயபுரத்தில் RSRM மருத்துவமனையில் 96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 புதிய கட்டடங்கள், பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய தளங்கள், 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிற்பயிற்சி நிலையம், 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ரெட்டேரி, வில்லிவாக்கம், பாடி ஏரிகளை சீரமைத்தல், 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

10 பள்ளிகளைப் புதுப்பித்தல், மேம்படுத்துதல் மற்றும் கணினிமயமாக்கல் போன்ற பல்வேறு வளர்ச்சிப் பணிகள் என மொத்தம் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

41. சென்னை மாநகராட்சி வடசென்னை பகுதிகளில் பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் அவற்றுக்கான தேவைகளை நிறைவுசெய்ய, சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ள கழிவுநீர் சேகரிப்புக் குழாய்கள், கழிவுநீர் இறைக்கும் நிலையங்கள், உந்து குழாய்கள் மற்றும் உபகரணங்களின் செயல்திறன் போதுமானதாக இல்லை. எனவே, வடசென்னைப் பகுதிகளில் கழிவுநீர் மற்றும் குடிநீர் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு கழிவுநீரைத் திறம்பட அகற்றுவதற்கும், நீர்நிலை மாசுபாட்டைத் தவிர்ப்பதற்கும் 946 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய திட்டம் நிறைவேற்றப்படும்.

42. சென்னையை ஒட்டி பூந்தமல்லிக்கு அருகில் அதிநவீனத் திரைப்பட நகரம் ஒன்று உருவாக்கப்பட உள்ளது. சுமார் 150 ஏக்கர் பரப்பளவில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில்,

இந்தக் கனவுத் தொழிற்சாலையில் VFX, Animation மற்றும் LED Wall போன்ற நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய படப்பிடிப்புத் தளங்கள், படத் தயாரிப்புக்குப் பிந்தைய பணிகளுக்கான (Post Production) கட்டமைப்புகள் மற்றும் படப்பிடிப்பிற்குத் தேவையான கட்டமைப்புகள், அரசு தனியார் பங்களிப்புடன் (Public - Private Partnership) அமைக்கப்படும்.

43. தமிழ்நாட்டில் நகர்ப்புரங்களில் வசிக்கும் மக்களுக்குத் தூய்மையான மற்றும் பசுமையான வாழிடச் சூழலை உருவாக்கிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. சென்னையில் உள்ள முக்கிய நீர்வழிகளான அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் மற்றும் கொசஸ்தலையாறு ஆகியவற்றைச் சீரமைத்திட இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதன் முதற்கட்டமாக சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலம், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கூடுவாஞ்சேரியிலிருந்து தாம்பரம், திருநீர்மலை, மணப்பாக்கம், ஆலந்தூர், சைதாப்பேட்டை பகுதிகள் வழியாகப் பாய்ந்து, வங்கக்கடலில் கலக்கும் அடையாறு நதியை மீட்டெடுத்து அழகுறச் சீரமைக்கும் திட்டம், அரசு தனியார் பங்களிப்புடன்

சுமார் 1,500 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். அடையாறு ஆற்றின் இரு கரைகளிலும் 70 கிலோமீட்டர் தூரத்திற்கு கழிவுநீர்க் குழாய்கள் அமைத்து கழிவுநீர் வெளியேறுவதற்கு ஏற்ற மாற்று வழிகளை அமைப்பது, நாள் ஒன்றிற்கு 110 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட 14 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், ஆற்றின் கரையில் மக்களின் மனம் கவரும் வகையில் நான்கு பூங்காக்கள் அமைத்தல் மற்றும் நதிக்கரை நெடுக பசுமைப் பரப்புகளை அதிகரிப்பது போன்ற சிறப்பு அம்சங்களை கொண்ட இத்திட்டம் விரைவில் தொடங்கப்பட்டு 30 மாத காலகட்டத்தில் பணிகள் நிறைவு செய்யப்படும். சைதாப்பேட்டை முதல் திரு.வி.க. பாலம் வரையிலான பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 15 மாதங்களுக்குள்ளாகவே இப்பணிகள் முடிக்கப்படும்.

44. காவிரி தென்பெண்ணை
பாலாறு-தமிழ்
கண்டதோர் வையை
பொருநை நதி -என
மேவிய ஆறு பலவோடத்
திருமேனி செழித்த தமிழ்நாடு

எனப் பாடிய மகாகவி பாரதியின் உணர்வுகளை உள்வாங்கி உரிய திட்டங்களை நமது அரசு தீட்டி வருகிறது. தமிழ்நாட்டின் பிற முக்கிய நகரங்கள் வழியாகப் பாய்ந்திடும் வைகை, காவிரி, தாமிரபரணி மற்றும் நொய்யல் ஆகிய நதிகளை ஒட்டிய பகுதிகள் சீரமைக்கப்பட்டு, நதிநீரை தூய்மையாகப் பராமரிக்கவும், கரையோரம் பசுமையான மரங்களுடன் கூடிய பூங்காக்கள், திறந்தவெளி அரங்கம் உள்ளிட்ட முக்கிய அம்சங்களுடன், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஈரோடு, மற்றும் கோயம்புத்தூரில் நதிகள் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்ள விரிவான ஆய்வுப் பணிகள் மற்றும் திட்ட அறிக்கை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்படும்.

45. வானுயர்ந்த கட்டடங்கள் பெருகிவரும் பெருநகரப் பகுதிகளில் பூங்காக்கள் மட்டுமின்றி, பசுமை வெளிகளை அதிகரித்து இயற்கைச் சூழலை மேம்படுத்துவதன் மூலம், நகர்ப்புரங்களில் காற்று மாசுபடுவதையும் குறைத்திட இயலும். எனவே, சென்னை பெருநகர மாநகராட்சி உள்ளிட்ட தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில்

பசுமைப் பரப்பை அதிகரிக்க வளர்ந்த மரங்கள் நடுவது, மியாவாக்கி காடுகள், பசுமைக்கூரைகள், செங்குத்துத் தோட்டங்கள், பசுமைச் சுரங்கப் பாதைகள், பசுமைத் திரைகள், நடைபாதைகளில் மரங்கள் அமைத்தல் என பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இப்பணிகள் **பசுமைத் தமிழ்நாடு இயக்கம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்போடு, 'நகர்ப்புர பசுமைத் திட்டம்' என்ற புதிய திட்டத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும்.**

46. தமிழ்நாட்டில் தற்போது ஈரோடு, வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல், தாம்பரம், நாகர்கோவில், காரைக்குடி, இராஜபாளையம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 12 மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் சோதனை அடிப்படையில் 24மணி நேரமும் தடையற்ற குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் பல்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதே அடிப்படையில், மதுரை மற்றும் சேலம் மாநகராட்சிகளிலும் 2024-25 ஆம் நிதியாண்டில் 24மணி நேரமும் தடையற்ற குடிநீர் விநியோகம் விரிவுபடுத்தப்படும்.

47. பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுக்கழிப்பறைகளை நவீனமுறையில் சீரமைத்து வடிவமைத்தல், இயக்குதல், பராமரித்தல் மற்றும் புதிய கழிப்பறைகளைக் கட்டுதல் பணிகளுக்காக அரசு தனியார் பங்களிப்பு முறையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் 430 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இதே முறையில் இந்த ஆண்டில் கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பிற பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

48. சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்தோடு 1,517 கோடி ரூபாய் மதிப்பில் நெமிலியில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. 9 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட இந்நிலையம் நிறைவுறும் தருவாயில் உள்ளது; விரைவில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

**குடிநீர் வழங்கல்**

49. 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வரும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் 7,890 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஓசூர் மாநகராட்சி, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சிகள், 16 பேரூராட்சிகள், 20 ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள 6,802 ஊரகக் குடியிருப்புகளில் வசித்து வரும் நாற்பது இலட்சம் மக்கள் பயனடைவதுடன், அப்பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்கும் உதவும்.

50. கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் நகராட்சியிலுள்ள சுமார் 65,000 மக்களுக்குத் தேவையான அளவு குடிநீர் வழங்கும் பொருட்டும், பெரம்பலூர் மாவட்டத்தில் எறையூர் மற்றும் பாடலூரில் அமைந்துள்ள சிப்காட் தொழில் வளாகத்திற்குத் தேவையான நீரை வழங்கும்பொருட்டும், ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் 366 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

51. காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், எருமப்பட்டி, கபிலர்மலை மற்றும் பரமத்தி ஆகிய 4 ஒன்றியங்களிலுள்ள 216 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் 358 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

52. வைகை ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, திண்டுக்கல் மாநகராட்சி, சின்னாளப்பட்டி. சேவுகம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 425 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் சுமார் 6 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் 565 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு 25,858 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மகளிர் நலன்**

53. **“ஒரு சமூகத்தில், பெண்கள் அடையும் வளர்ச்சியைக் கொண்டே அச்சமூகத்தின் வளர்ச்சியை மதிப்பிட வேண்டும்”** என்று உரைத்த அண்ணல் அம்பேத்கரின் வழியில், ஆணுக்கிங்கே பெண் நிகர் என்னும் சரிநிகர் சமத்துவப் பாதையில் மகளிர் நலன் காக்க பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டி தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. நாட்டிற்கே முன்னோடியாக பெண்களுக்கு சொத்துரிமை வழங்கி, கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் தனி இட ஒதுக்கீடு அளித்தது முதல், அவர்களுக்கு விடியல் பயணத் திட்டம் வரை புதுமையான பல திட்டங்கள் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. அந்த வரிசையில் “சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்” என்ற இலக்கின்படி செயல்பட்டு அறிவிக்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம், ஒரு கோடியே பதினைந்து இலட்சம் குடும்பத் தலைவிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் அவர்களுடைய வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டு வருகிறது.

54. விலைவாசி உயர்வால் தொடர்ந்து அதிகரிக்கும் குடும்பச் செலவுகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் என்பது அவர்களது அன்றாட வாழ்க்கைக்கு பேருதவியாக இருப்பது மட்டுமின்றி, அவர்கள் மாதந்தோறும் கணிசமாக சேமிக்கவும் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின் நோக்கம், தரவுகளின் அடிப்படையில் பயனாளிகளைத் தேர்வு செய்த முறை, திட்டச் செயலாக்கத்தில் கணிணிமயம் மற்றும் வெளிப்படைத் தன்மை ஆகிய அம்சங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. **மகத்தான இத்திட்டத்தை பல்வேறு மாநிலங்களிலுள்ள மகளிரும் பயன்பெறும் வகையில் எதிர்காலத்தில் இந்த நாடே பின்பற்றும் என்று நம்புகிறோம். மகளிர் நலன் காக்கும் இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 13,720 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்**.

55. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற முதல் நாளிலேயே கையெழுத்திட்ட முதல் ஐந்து கோப்புகளில் மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கும் “விடியல் பயணம்” என்ற மகத்தான திட்டமும் ஒன்று. தமிழ்நாட்டு மகளிரிடையே பெரும் வரவேற்பைப்

பெற்றுள்ள இத்திட்டம் அவர்களுடைய சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குப் பெரிதும் துணைபுரிவதாக பல்வேறு ஆய்வுகள் தெரிவித்திருக்கின்றன. சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் விடியல் பயணத் திட்டத்தின் மூலம் பயணம் செய்யும் பெண்களின் சதவீதம் 40 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக உயர்ந்துள்ளது. தினமும் சராசரியாக 50 இலட்சம் மகளிர் பயணம் செய்து, ஜனவரி 2024 நிலவரப்படி, பேருந்துகளில் மகளிர் 444 கோடி பயணங்களை மேற்கொண்டுள்ளனர். மேலும், திருநங்கைகள் மற்றும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களும் கட்டணம் இல்லாமல் பயணம் செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது, **மாநிலத்தின் மலைப்பகுதிகளில் வாழும் மகளிர் பயன்பெறும் வகையில் நீலகிரி மாவட்டம், கொடைக்கானல், வால்பாறை போன்ற மலைப்பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். மகளிரின் பேராதரவு பெற்ற இத்திட்டத்திற்கான மானியத்தொகையாக 3,050 கோடி ரூபாயை 2024-25 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அரசு ஒதுக்கியுள்ளது**.

56. காலத்திற்கேற்ப அரசு நலத்திட்டங்களின் நோக்கத்தையும், செயல் வடிவத்தையும் மாற்றித் தகவமைத்துக் கொள்வது முதிர்ச்சியடைந்த ஒரு அரசின் செயல்பாடாகும். அந்தவகையில், ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த மாணவியர் உயர்கல்வி பயிலுவதை உறுதிசெய்யும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டத்தில் 2 இலட்சத்து 73 ஆயிரம் மாணவிகள் மாதந்தோறும் ரூபாய் 1,000 பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், உயர்கல்வியில் முதலாமாண்டு சேரும் மாணவிகளின் எண்ணிக்கை நடப்பு ஆண்டில் 34 சதவீதம் அதிகரித்து, கூடுதலாக 34,460 மாணவியர் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர் என்பதை பெருமையுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இத்தகைய சிறப்புகளைக் கொண்ட இந்தப் **புதுமைப்பெண் திட்டம், வரும் கல்வியாண்டு முதல் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்வழியில் பயிலும் மாணவிகளும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்படும். இந்த ஆண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த 370 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது**.

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**

57. "**Nothing is more powerful than an idea whose time has come**" புகழ் பெற்ற பிரெஞ்சு இலக்கியவாதியான விக்டர் ஹீயூகோவின் காலத்தை வென்ற இந்த வாசகத்திற்கு 21 ஆம் நூற்றாண்டில் செயல் வடிவம் கொடுத்தவர், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

58. மதியஉணவுத் திட்டம் மற்றும் சத்துணவுத் திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்கள் தமிழ்நாட்டில் திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும், பல குழந்தைகள் காலைஉணவு அருந்தாமல் பள்ளிக்கு வருவதால் அவர்களிடம் கவனச்சிதறல் தென்படுவதையும், ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் குழந்தைகளின் நலன் பாதிக்கப்படுவதையும் எடுத்துக் கூறி, கல்வியாளர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் பலரும் காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளாகவே கோரிக்கைகளை முன் வைத்து வந்தனர். **எனினும், காலம் மாண்புமிகு நமது முதலமைச்சர் அவர்களின் வருகைக்காகக் காத்திருந்தது.**

59. சமூகநீதியை அடிப்படையாகக் கொண்ட திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" கடந்த 2022ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளன்று மதுரையில் தொடங்கப்பட்டு, பிறகு கடந்த 2023ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து 30,992 அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 15 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர், மாணவர்களின் வருகை உயர்ந்துள்ளதோடு, அவர்களின் ஊட்டச்சத்தும் கற்றல் திறனும் மேம்பட்டுள்ளது என ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

60. **"பள்ளிக்கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றிக் கல்வியறிவு பெற்றிடவும், எந்தத் தியாகத்தையும் செய்திடுவோம்"** என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உன்னத நோக்கத்தினை மேலும் முழுமையாகச் செயல்படுத்திட, **தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு**

**உதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலும் மேலும் சுமார் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் பயனடையும் வகையில், வரும் கல்வி ஆண்டு முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக வரும் நிதியாண்டில் 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

61. தமிழ்நாட்டில் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்தும் பொருட்டு "**ஊட்டச்சத்தை உறுதி செய்**" என்ற திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, அதன் விளைவாக, ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகளில், 74 சதவீத குழந்தைகள் இயல்புநிலைக்கு முன்னேறியுள்ளனர். இன்னும், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுள்ளவர்களாகக் கண்டறியப்படும் 6 மாதத்திற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளின் தாய்மார்களுக்கும் ஊட்டச்சத்துப் பெட்டகம் வழங்கப்படும். மேலும், குழந்தைகள் மையங்களில் அடிப்படை வசதிகளை உறுதி செய்திடும் வகையில், வரும் நிதியாண்டில் சுமார் 70 கோடி ரூபாய் செலவில்

வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 500 குழந்தைகள் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும். ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் 3,123 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

62. 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் தொலைநோக்குடன் விதைக்கப்பட்ட சுயஉதவிக் குழுத் திட்டம், இன்று நாடெங்கும் கோடிக்கணக்கான மகளிரின் வாழ்க்கையில் ஒளியேற்றும் இயக்கமாக உருவெடுத்துள்ளது. மகளிரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அவர்களை தொழில்முனைவோர்களாக மாற்றி சமூகத்தில் பெண்களுக்கு உரிய பங்கினை வழங்கிடும் நோக்கில் அவர்களின் வளர்ச்சிக்கும், திறன் மேம்பாட்டிற்கும் தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. இதுவரை, சுயஉதவிக் குழு இயக்கத்தில் இணைந்திடாத மகளிர் மற்றும் விளிம்புநிலை வாழ் குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு, 10,000 புதிய சுயஉதவிக் குழுக்கள் வரும் நிதியாண்டில் உருவாக்கப்படும். மேலும், வரும் நிதியாண்டில் 35,000 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

63. தமிழ்நாட்டின் முத்திரை பதிக்கும் திட்டங்களில் ஒன்றான '**தோழி**' பணிபுரியும் மகளிர் விடுதிகள் தாம்பரம், திருச்சிராப்பள்ளி, கூடுவாஞ்சேரி உள்ளிட்ட 10 இடங்களில் 1,145 மகளிர் பயன்பெறும் வகையில் 35 கோடி ரூபாயில் அனைத்து நவீன வசதிகளுடன் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. சென்னை, திருவண்ணாமலை, ஓசூர் ஆகிய நகரங்களில், 432 பெண்கள் பயன்பெறும் வகையில், 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய 'தோழி' விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து, **வரும் நிதியாண்டில், சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய முக்கிய நகரங்களில் 345 மகளிர் பயன்பெறும் வகையில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 புதிய 'தோழி' விடுதிகள் கட்டப்படும்**.

64. மூன்றாம் பாலினத்தவரின் நல்வாழ்வுக்கென பல்வேறு புதுமையான திட்டங்களை நாட்டிலேயே முன்னோடியாக தமிழ்நாடு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. மூன்றாம் பாலினத்தவரின் சமூகப் பொருளாதார மேம்பாட்டினை உறுதிசெய்து, வாழ்க்கையில் வெற்றிபெற அவர்கள் உயர்கல்வி கற்பது மிகவும் இன்றியமையாததாகும்.

எனினும், தற்போது மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மூன்றாம் பாலினத்தவர் மட்டுமே தமிழ்நாட்டில் உயர்கல்வி பயின்று வருகின்றனர். எனவே, **உயர்கல்வியைத் தொடர விரும்பும் மூன்றாம் பாலினத்தவரின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கல்விச் செலவுகளையும் அரசே ஏற்கும்.** திருநங்கைகள் நல வாரியம் மூலம் நடைமுறைப்படுத்தவிருக்கும் இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 2 கோடி ரூபாய் கூடுதலாக அரசால் வழங்கப்படும்.

65. அரசு கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றை திறம்படச் செயல்படுத்தவும் அதன் நிர்வாகத்தை மேம்படுத்தவும் உரிய ஆலோசனைகள் வழங்கிட அமைக்கப்பட்ட மேனாள் நீதியரசர் திரு. கே. சந்துரு அவர்கள் தலைமையிலான ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இத்துறையில் உரிய சீர்திருத்தங்களை மேற்கொள்வது என இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதுவரை சமூகப் பாதுகாப்புத் துறை என்ற பெயரில் இயங்கி வந்த இந்தத் துறை, இனி “**குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை**” என பெயர் மாற்றம் செய்யப்படும்.

மேலும், தலைமைப் பாதுகாப்பு அலுவலர் உள்ளிட்ட புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு, துறையின் மனிதவள மேலாண்மை உறுதி செய்யப்படும்.

66. மேலும், முதற்கட்டமாக கோயம்புத்தூரில் குழந்தைகளுக்கான திறன்பயிற்சிக் கூடம், ஆலோசனை அறைகள், நூலகம், குடும்பப் பார்வையாளர்கள் அறை, மருத்துவப் பரிசோதனை அறை, பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம் ஆகிய வசதிகளுடன் கூடிய ஒரு மாதிரி இல்லம் **பூஞ்சோலை** என்ற பெயரில் அமைக்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறைக்கு 7,830 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பள்ளிக் கல்வி**

67. “**கல்வி மட்டுமே சமத்துவம் மலரச் செய்யும் மிகப்பெரிய ஆயுதம்**” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். கல்வி முன்னேற்றத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவரும் தலைசிறந்த கல்வியாளருமான பேராசிரியர் அன்பழகன்

அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கென 7,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேராசிரியர் அன்பழகனார் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தை 5 ஆண்டுகளில் செயல்படுத்த இந்த அரசால் அறிவிக்கப்பட்டு, 2,497 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. **இந்நிதியாண்டிலும் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும்**.

68. அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக மாற்றும் உயர்ந்த நோக்கத்தோடு அமைக்கப்பட்ட உண்டு, உறைவிட மாதிரிப் பள்ளிகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் படிக்கும் ஒவ்வொரு மாணவரும் நாட்டின் முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறமுடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் 38 மாதிரிப் பள்ளிகள் 352 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, பல்வேறு மாவட்டங்களில் உள்ள 28 பள்ளிகள் தகைசால் பள்ளிகளாக 100 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

69. நவீன தொழில்நுட்பத்தை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவும் பொருத்தமான கற்றல் - கற்பித்தல் சூழலை உருவாக்கவும், அனைத்து அரசு நடுநிலைப் பள்ளிகளில் 525 கோடி ரூபாய் செலவில் 8,209 உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech lab) மற்றும் 435 கோடி ரூபாய் செலவில் 22,931 தொடக்கப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classroom) அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட உள்ளன. மேலும், **வரும் நிதியாண்டில் 15,000 திறன்மிகு வகுப்பறைகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

70. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் இல்லத்தில் முடங்கிக் கிடந்தவை குழந்தைகள் மட்டுமல்ல; அவர்களது கல்விக் கனவும் தான். அதனை மீட்டு அவர்களிடம் ஏற்பட்ட கற்றல் இடைவெளியைப் போக்கவும் கற்றல் இழப்பை ஈடுசெய்யவும், இடைநின்ற குழந்தைகளை மீண்டும் பள்ளிகளில் சேர்க்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இல்லம் தேடிக் கல்வி திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளிலும் தன்னார்வலர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் குழந்தைகளிடம் ஏற்பட்ட

கற்றல் இழப்பை மீட்டெடுத்ததில் மிகப்பெரும் பங்காற்றியுள்ளது. வரும் கல்வியாண்டு முதல் இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை, தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுத்திட 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

71. வாசிப்பை நேசிக்கும் மக்கள் இயக்கம் ஒன்றை உருவாக்கிடும் உயரிய நோக்கில், சென்னை புத்தகக் கண்காட்சியைப் போன்று தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 2022-23 ஆம் ஆண்டு முதல் 13 கோடி ரூபாய் அரசு நிதியுதவியுடன் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில், 37 மாவட்டங்களில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகளில், சுமார் 55 இலட்சம் புத்தக ஆர்வலர்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர். மேலும், இக்கண்காட்சிகளின் வாயிலாக, சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பிலான புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

72. இளைஞர்கள் அறிவுசார் தளத்தில் உயர்ந்திட நூலகங்கள் முதன்மைக் களமாக உள்ளன. குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களை ஈர்க்கும்

வகையில் பொது நூலகங்களில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்திட 213 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பள்ளிக்கல்வித் துறைக்கு 44,042 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உயர்கல்வி**

73. நாட்டிலேயே உயர்கல்விச் சேர்க்கை விகிதம் அதிகமாக உள்ள மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. அந்தச் சாதனை அளவைத் தக்கவைத்திடவும், கல்லூரி மாணவர்களுக்குத் தரமான உயர்கல்வியினைத் தொடர்ந்து வழங்கிடவும் இந்த அரசு பல முன் முயற்சிகளை எடுத்து வருகிறது. பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரசுக் கல்லூரிகளின் கட்டடங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. வரும் நிதியாண்டில், அரசு பொறியியல், கலை அறிவியல் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் கட்டடக் கட்டமைப்புப் பணிகள் 200 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். மேலும், ஒருங்கிணைந்த கற்றல் மேலாண்மை அமைப்புடன் பொறியியல்,

பலவகை தொழில்நுட்பம், கலை, அறிவியல் கல்லூரிகள் உட்பட 236 அரசு கல்வி நிறுவனங்களுக்கு கணினி மற்றும் இதர அறிவியல் கருவிகள் 173 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். 45 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளை (Poly Technic) தொழில்துறை 4.0 தரத்திற்கு உயர்த்திட 3,014 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

74. கடந்த 2021-22 ஆம் ஆண்டு பொறியியல், வேளாண்மை உள்ளிட்ட தொழிற்படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் அந்த மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என அவர்களின் மொத்தக் கல்விச் செலவையும் முழுமையாக அரசே ஏற்றுக்கொள்கிறது. இத்திட்டத்தின் கீழ், பல்வேறு தொழிற்படிப்புகளில் தற்போது படித்து வரும் 28,749 மாணவர்களின் கல்விக் கட்டணத்தையும் அரசே ஏற்பதற்காக வரும் நிதியாண்டில் 511 கோடி ரூபாய் செலவிடப்படும்.

75. பன்முகத் திறனுடன் கூடிய தொழிற் சூழல், தொழில் முனைவோரின் உற்சாகம், தலைசிறந்த கல்வி நிறுவனங்கள், இனிய விருந்தோம்பல் என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட கோயம்புத்தூர் மாநகரம், நாட்டிலேயே மிக வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும். கோவை வாழ் பொதுமக்களிடையே, குறிப்பாக **இளைய தலைமுறையினரின் அறிவுத் தாகத்தை மேலும் தூண்டும் விதமாக ஒரு மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மையம், முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் கோயம்புத்தூரில் அமைக்கப்படும்.** இதில் உலகத்தரம் வாய்ந்த நூல்கள், பத்திரிகைகள், இதழ்கள் மற்றும் இணைய வளங்களும் இடம்பெறுவது மட்டுமன்றி விண்வெளி, எந்திரவியல், மெய்நிகர் தோற்றம் (Virtual Reality), இயற்கை அறிவியல் என பல்வேறு அறிவியல் மற்றும் பொறியியல் பிரிவுகளைச் சார்ந்த கண்காட்சிகள் ஏற்படுத்தப்படும். மேலும், புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் திறன் வழங்கிடும் வகையில் ஒரு தொழில் வளர் காப்பகம் (Incubation Hub) ஏற்படுத்தப்படும். அறிவியலைக் கொண்டாடும் இப்புதிய மையம் அறிவுசார் தமிழ்ச் சமூகத்தின்

அடையாளச் சின்னமாகத் திகழும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உயர்கல்வித் துறைக்கு 8,212 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நான் முதல்வன்**

76. உலகை வெல்லும் இளைய தமிழகத்தைப் படைக்கும் உயரிய நோக்கத்தோடு நான் முதல்வன் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். தனிச்சிறப்பு மிக்க இத்திட்டத்தில் இதுவரை சுமார் 28 இலட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 18 ஆயிரம் பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும், 20,000 கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு பயிற்சி பெற்ற மாணவர்களில் 1.19 இலட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

77. தமிழ்நாட்டில் பரவலாக கல்லூரிகளில் திறன் பயிற்சிக் கட்டமைப்பை உருவாக்குவது மிகவும் அவசியமாகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு **அரசு மற்றும் அரசு உதவிபெறும்**

**100 பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திறன் பயிற்சிக் கட்டமைப்புகள் (Skill Labs) உருவாக்கப்படும்**.

78. ஒன்றிய குடிமைப்பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ச்சி பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரித்திட, ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு, அவர்கள் முதல்நிலை தேர்வுக்குத் தயாராக மாதந்தோறும் 7,500 ரூபாய் மற்றும் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கடந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, தற்போது **ஒன்றியப் பணியாளர் தேர்வாணையம், இரயில்வே மற்றும் வங்கிப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டு இளைஞர்கள் அதிகம் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு சென்னை, கோவை, மதுரை மண்டலங்களில் உண்டு, உறைவிட வசதியோடு கூடிய**

**தரமான ஆறுமாத காலப் பயிற்சி வழங்கிட 6 கோடி ரூபாய் இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்**.

79. அரசுப் பள்ளி மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடும் பொருட்டு, அரசு பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அந்த வரிசையில், அரசுப் பள்ளி மாணவர்கள் தங்களது பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வெளிநாடுகளில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் பயின்றிட உதவித்தொகை அளித்து உதவும் வகையில், ஒரு புதிய திட்டம் வரும் ஆண்டு அறிமுகப்படுத்தப்படும்.

80. உயர்கல்வியில் பெண்களின் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப்பெண் திட்டம் பெண்களின் உயர்கல்வியில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல், **அரசுப் பள்ளிகளில் பயின்ற, ஏழை எளிய மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடவும் அரசுப் பள்ளி மாணவரின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடவும்**

**‘தமிழ்ப் புதல்வன்’ எனும் ஒரு மாபெரும் திட்டம் வரும் நிதியாண்டில் இருந்து அறிமுகப்படுத்தப்படும்.** இத்திட்டத்தின் கீழ், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவர்கள் பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற்றும் இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். இத்தகைய முன்னோடித் திட்டங்களின் மூலம் நமது இளைஞர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி அவர்கள் நமது மாநிலம் மற்றும் நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழ்வார்கள். **இப்புதிய திட்டத்தின் மூலம் சுமார் மூன்று இலட்சம் கல்லூரி மாணவர்கள் பயனடைவர்.** உயரிய நோக்கம் கொண்ட இத்திட்டத்தை நிறைவேற்றிட வரும் நிதியாண்டில் 360 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

81. தமிழ்நாட்டு மாணவர்களின் கல்லூரிக் கனவை நனவாக்கிடவும், அவர்தம் பெற்றோரின் நிதிச்சுமையைப் பகிர்ந்து கொள்ளும் வகையிலும், தேவையின் அடிப்படையில் **2024-25 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் கல்லூரி மாணவர்களுக்கு**

**2,500 கோடி ரூபாய் அளவிற்கு, பல்வேறு வங்கிகள் மூலம் கல்விக்கடன் வழங்கிடுவதை அரசு உறுதி செய்திடும்.**

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு**

82. விளையாட்டுப் போட்டிகளின் தலைமையகமாக தமிழ்நாட்டை மாற்றிடவும் இலட்சிய வேட்கையுடன் ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களை உருவாக்கிட, சென்னை, மதுரை, திருச்சி மற்றும் நீலகிரி மாவட்டங்களில் நான்கு ஒலிம்பிக் பயிற்சி மையங்கள் (Olympic Academy) நிறுவப்படும். இப்பயிற்சி மையங்கள் இறகுப்பந்து, கையுந்து பந்து, கூடைப்பந்து, தடகளம் உள்ளிட்ட விளையாட்டுகளுக்கான உலகத்தரமிக்க பயிற்சிகளை வழங்குவதுடன் விளையாட்டு அறிவியலுக்கான மையங்களாகவும் செயல்படும்.

83. தமிழ்நாட்டு இளைஞர்களின் ஆற்றலையும் அறிவுத்திறனையும் ஆக்கப்பூர்வமாகவும் பயனுள்ளதாகவும் மெருகேற்றி, தரணி போற்றிடும் சாதனையாளர்களாக உருவாக்கிட முதலமைச்சரின் இளைஞர் திருவிழாக்கள் தமிழ்நாடெங்கும் நடத்தப்படும். இளைஞர்களின் கலைத்

திறமைகளை வெளிக்கொணரும் வகையில் பேச்சு, பாட்டு, இசை, நடனம் என பன்முகப் போட்டிகள் நடத்தப்படும். மேலும், கிரிக்கெட், கையுந்து பந்து, கால்பந்து, இறகுப்பந்து, சிலம்பம் என 33 விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிக்கான கருவிகள் அடங்கிய கலைஞர் விளையாட்டு தொகுப்புகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் வழங்கப்படும்.

84. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியே தமிழ்நாடு அரசின் தாரக மந்திரம். இம்முயற்சிகளின் ஓர் பகுதியாக மாற்றுத்திறன் படைத்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் (Para Athletes) திறமைகளை மேம்படுத்திட, நாட்டிலேயே முதன்முறையாக மாற்றுத்திறனாளிகளுக்கான 6 விளையாட்டு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் மாற்றுத்திறனாளிகளின் விளையாட்டுத் திறனை வளர்க்கும் நோக்கோடு அவர்கள் விளையாடுவதற்கு ஏற்ற சிறப்பு இறகுப்பந்து, கையுந்து பந்து, வாள்வீச்சு உள்ளிட்ட ஆடுகளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

85. கடல்சார் நீர் விளையாட்டுகளில் இளைஞர்களின் ஆர்வத்தை ஈர்த்திடவும் நீர் விளையாட்டுப் போட்டிகளுக்கான உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பை ஏற்படுத்திடவும் இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாடு ஒலிம்பிக் நீர் விளையாட்டு அகாதமி (Tamil Nadu Olympic Water Sports Academy) இராமநாதபுரம் மாவட்டத்தில் பிரப்பன்வலசையில் அமைக்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு 440 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நலன்**

86. நல்ல தரமான வேலைவாய்ப்புகளை இளைஞர்கள் பெற்றிடும் வகையில், அவர்களின் திறனை உயர்த்திட இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. 71 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களை “தொழில் 4.0” தரநிலைக்கு உயர்த்தி, 2,877 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்திறன் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

87. மேலும், கடலூர் மாவட்டம் வேப்பூர், திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி, நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம், புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, திருப்பத்தூர் மாவட்டம் நாட்றாம்பள்ளி, திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர், திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் ஏரல் ஆகிய இடங்களில் **10 புதிய அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் 111 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்படும்.** அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களின் கல்வி கற்றல் தரத்தினை மேம்படுத்திட திறன்மிகு வகுப்பறைகள் அமைக்கப்படும்.

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு**

88. தமிழ்நாட்டில் மருத்துவத் துறையின் தொடர் முயற்சிகளினால், 2030 ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் நலம் தொடர்பான நிலைத்த வளர்ச்சி இலக்குகளை (SDG) நமது மாநிலம் ஏற்கெனவே எட்டியுள்ளது. இந்நிலையில், தமிழ்நாட்டில் தொற்றாநோய்களின் பரவல் அதிகரித்து வருவதை

கருத்திற்கொண்டு, தொற்றாநோய் உண்டாவதற்கு முக்கியக் காரணிகளாக விளங்கும் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவது அவசியம். இந்நோக்கத்தோடு, "மக்களைத் தேடி மருத்துவம்" எனும் ஒரு மகத்தான திட்டத்தினை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. குடும்பத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் வீட்டிலிருந்தே பயன்பெறும் வகையில், சேவைகளை வழங்கும் இத்திட்டத்திற்காக, 243 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

89. மருத்துவக் காப்பீட்டினைப் பயன்படுத்தி நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில், அரசு மருத்துவமனைகளின் பங்களிப்பை 50 சதவீதத்திற்கும் மேலாக உயர்த்தி, நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இந்த மருத்துவமனைகளில் கட்டமைப்பை மேலும் மேம்படுத்தி, உயர் சேவைகளை வழங்குவதற்காக காப்பீட்டுத் தொகுப்பு நிதியிலிருந்து 200 கோடி ரூபாய் செலவிடப்படும்.

90. விலைமதிப்பற்ற மனித உயிர்களைக் காத்து, 2 இலட்சம் நபர்களுக்கு மேல் பயன் பெற்றுள்ள

நாட்டிலேயே முன்னோடியான 'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48' திட்டத்தை மேலும் மேம்படுத்திட இந்த அரசு முனைந்துள்ளது. சிகிச்சை செலவுகளைக் கருத்திற்கொண்டு, இத்திட்டத்தின் கீழ், **விபத்து நடந்த முதல் 48 மணி நேரத்தில் வழங்கப்படும் இலவச சிகிச்சைக்கான உச்சவரம்புத் தொகை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.**

91. மாநிலம் முழுவதிலும் உள்ள தீவிர சிசிச்சைப் பிரிவுகள் மற்றும் நோய் கண்டறிதல் சேவைகளுக்கான கட்டமைப்பு வசதிகள் வரும் நிதியாண்டில் மேலும் மேம்படுத்தப்படும். இராமநாதபுரம் மாவட்டம் - இராமேஸ்வரம், அரியலூர் மாவட்டம் - செந்துறை, காஞ்சிபுரம் மாவட்டம் - திருப்பெரும்புதூர், இராணிப்பேட்டை மாவட்டம் - அரக்கோணம் ஆகிய அரசு மருத்துவமனைகளிலும், தேனி மற்றும் சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், 50 படுக்கைகள் கொண்ட 6 தீவிர சிகிச்சைப் பிரிவுகள் 142 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். அதேபோல், ஈரோடு மாவட்டம், பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி

மருத்துவமனையில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டப்படும். மேலும், 87 கோடி ரூபாயில் 25 வட்டம் மற்றும் வட்டம்சாரா மருத்துவமனைகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் 64 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

92. புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்தர சிகிச்சைகளை அளிப்பதோடு, இந்நோயை ஆரம்பநிலையிலேயே கண்டுபிடிப்பது புற்றுநோயால் ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைத்திட மிகவும் அவசியமாகும். இந்த வகையில், மாநிலத்தில் உள்ள பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சைத்துறைகளை இந்த அரசு மேம்படுத்தியுள்ளது. புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, நோய் வந்த பின்பு ஆரம்ப நிலையிலேயே அதனை கண்டறிவது, தகுந்த சிகிச்சை அளிப்பது மற்றும் புனர்வாழ்வு சேவைகள் அளிப்பது போன்ற பல்வேறு நோய் மேலாண்மை உத்திகளைக் கொண்டு, ஒரு புதிய புற்றுநோய் மேலாண்மை இயக்கத்தை இந்த அரசு செயல்படுத்தும்.

அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்குத் தேவையான உயர்தர சிகிச்சைக்காக கூடுதல் உயர்நிலை புற்றுநோய்க் கருவிகள் வழங்கப்பட்டு, அதை உயர்திறன் மையமாக (Centre of Excellence) தரம் உயர்த்தப்படும்.

93. 25 அரசு மருத்துவமனைகளில் சிறப்பு போதைப் பழக்க மீட்பு மையங்களை நிறுவி, மது மற்றும் போதைப் பொருட்களால் பாதிக்கப்பட்டோருக்கு தேவையான மனநல ஆலோசனை, மருத்துவ சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகள் 20 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 20,198 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழில் வளர்ச்சி**

94. இந்தியாவின் முதலாவது PM MITRA ஜவுளிப் பூங்கா கடந்த ஆண்டு விருதுநகர் மாவட்டத்தில், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சியில் தொடங்கப்பட்டது.

ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகளுக்கான ஒருங்கிணைந்த மற்றும் மதிப்பூட்டப்பட்ட உற்பத்தி மையமாகத் திகழவிருக்கும் இப்பூங்காவை அமைக்கும் பணிகள் 1,683 கோடி ரூபாய் மதிப்பில் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் இரண்டு இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். மேலும் சிப்காட் நிறுவனம் மூலம், சேலம் மாவட்டத்தில் 111 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டு வரும் பூங்காவின் மூலம் 8,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் 800 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்படும்.

95. தஞ்சை மண்டலத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் விதமாக, தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டி அருகில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 300 ஏக்கர் நிலப் பரப்பளவில் சிப்காட் நிறுவனம் ஒரு புதிய தொழிற்பூங்காவை அமைக்கும். இந்தப் புதிய பூங்காவில் உணவுப் பொருட்கள் பதப்படுத்துதல், தோல் அல்லாத காலணிகள் உள்ளிட்ட சுற்றுச்சூழல் மாசு ஏற்படுத்தாத தொழில்கள் அமைக்க உரிய முயற்சிகள் எடுக்கப்படும்.

96. உடனடியாக தொழில் தொடங்கிட விரும்பும் அயல்நாட்டு முதலீட்டாளர்களின் தேவையை நிறைவுசெய்யும் விதமாக ஆயத்தத் தொழிற்கூடங்களை (Plug and Play facilities) உருவாக்குவதற்கான கொள்கையை சிப்காட் வரும் நிதியாண்டு முதல் செயல்படுத்தும். இந்த ஆயத்தத் தொழிற்கூடங்கள் பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்புடன் முதற்கட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டம் - சூளகிரி மற்றும் திருவள்ளூர் மாவட்டம் - மாணலூர் ஆகிய இடங்களில் அமைக்கப்படும்.

97. தொழிற்துறைகளில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கையில் நாட்டிலேயே அதிக பங்களிப்பை கொண்டிருப்பதும், மாநிலத்தின் தொழிற் சூழலமைப்பின் பாலினப் பன்முகத் தன்மையும் முற்போக்கான முதலீட்டாளர்கள் பலரை தமிழ்நாட்டிற்கு ஈர்க்கின்றன. இதனை உணர்ந்து, இவற்றை மேலும் உயர்த்திடவும், பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிப்பதை மேலும் அதிகரிக்கவும், ஒரு சிறப்புத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். **தமிழ்நாட்டைச் சார்ந்த பெண்கள், மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர் போன்ற 500 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு**

**நேரடி வேலைவாய்ப்பு அளிக்கும் புதிய தொழில் நிறுவனங்களுக்கு, அவர்களின் ஊதியத்தில் 10 சதவீதம் ஊதிய மானியம் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.** பணிபுரியும் மகளிரின் மழலைக் குழந்தைகளின் நலன் காத்து உதவும் வகையில் அனைத்து சிப்காட் தொழிற்பேட்டைகளிலும் பொதுத்துறை தனியார் பங்களிப்புடன் குழந்தைகள் காப்பகங்கள் தொடங்கப்படும். மகப்பேறு, திருமணம் போன்ற பல காரணங்களினால் பணியில் இடைநிற்க நேரிட்டு, மீண்டும் வேலைக்குச் செல்ல விரும்பும் பெண்களுக்குத் தேவையான தனித்திறன் பயிற்சி அளிப்பதற்கான புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

98. மாநிலத்தில் சமச்சீரான வளர்ச்சியை உறுதி செய்வதற்கு சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு நல்ல ஒரு வாய்ப்பாக அமைந்தது. 6.64 இலட்சம் கோடி ரூபாய்க்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதில், தென்மாவட்டங்கள் 1.12 இலட்சம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்துள்ளன. சிறிய அளவிலான செயற்கைக்கோள்களை ஏவுவதற்கான

விண்வெளித் தளத்தை தூத்துக்குடி மாவட்டத்தில் இஸ்ரோ நிறுவனம் தற்போது உருவாக்கி வருகிறது. அதனையொட்டிய பகுதிகளில் **வான்வெளி சார்ந்த தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் விதமாக 2000 ஏக்கர் நிலப்பரப்பளவில் ஒரு புதிய விண்வெளி தொழில் மற்றும் உந்துசக்தி பூங்கா (Space Industrial and Propellant Park) டிட்கோ நிறுவனத்தால் அமைக்கப்படும்.**

99. தமிழ்நாடு, ஓர் அறிவுசார் பொருளாதார மாநிலமாக வெற்றிகரமாக மாற்றம் அடைந்து வருவதற்கான அடையாளமாக, அதிக எண்ணிக்கையிலான முக்கிய பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் உலகளாவிய திறன் மையங்களை (GCC) தற்போது தமிழ்நாட்டில் அமைத்து வருகின்றன. உலகச் சந்தைக்குத் தேவையான அதிநவீன ஆராய்ச்சி, வடிவமைப்பு, மாதிரி வடிவமைப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு போன்றவை தற்போது நம் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவில், உலகளாவிய திறன் மையங்கள் அமைப்பதற்குரிய தலைசிறந்த இடமாக தமிழ்நாட்டினை உருவாக்குவதற்கு, மாநிலத்தில் அமைய உள்ள புதிய உலகளாவிய திறன் மேம்பாட்டு மையங்களில், ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட

மாத ஊதியத்துடன் உருவாக்கப்படும் உயர்திறன் மிக்க வேலைகளுக்கு முதலாமாண்டு 30 சதவீதம், இரண்டாமாண்டு 20 சதவீதம் மற்றும் மூன்றாமாண்டு 10 சதவீதம் ஊதிய மானியம் வழங்கப்படும். மேலும், கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகரங்களில் உலகளாவிய திறன் மையங்கள் அமைப்பதற்கான உகந்த சூழல் ஏற்படுத்தப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைக்கு 2,295 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குறு,சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்**

100. முதல் தலைமுறை தொழில்முனைவோர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் வரும் நிதியாண்டில் 101 கோடி ரூபாய் அளவிற்கு மானிய உதவி அளிக்க நிதி ஒதுக்கப்படும். மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் அவர்களுக்குரிய தொகை அளிக்கப்படுவதை உறுதிசெய்ய மின்னணு வர்த்தக வரவுகள் தள்ளுபடி (TReDS) தளத்தில் பெரும்பான்மையான பொதுத்துறை நிறுவனங்களும் இணைவது உறுதி செய்யப்படும்.

101. கடந்த மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகளின் விளைவாக புத்தொழில் நிறுவனங்கள் (Startups) அமைவதற்கான உகந்த சூழலை உருவாக்குவதில் நாட்டிலேயே தலைசிறந்த மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு தேர்வுசெய்யப்பட்டுள்ளது என்பது பெருமகிழ்ச்சிக்குரியது. அந்த வெற்றியைத் தக்கவைக்கும் நோக்கோடு, **உலகின் பல்வேறு பகுதிகளில் முத்திரை பதித்த முன்னணி புத்தொழில் நிறுவனங்களும், இளம் தொழில்முனைவோர்களும் கலந்துகொள்ளும் வகையில் "உலக புத்தொழில் மாநாடு" (Global Startup Summit) வரும் 2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடத்தப்படும்.**

102. பல்வேறு சமூக மேம்பாடு குறித்த தேவைகள், காலநிலை மாற்றம், அரசுத்துறை சார்ந்த சேவைகள் குறித்தான தீர்வுகளை உருவாக்கவும், அவற்றை செயல்படுத்தக்கூடிய ஆர்வமும் ஆற்றலும் மிக்க தொழில்முனைவோர்களைக் கண்டறிந்து, அந்நிறுவனங்களுக்குத் தேவையான வளங்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்திடவும், பெரியார் சமூகநீதி புத்தொழில் வளர்மையம் (Periyar Social Justice Venture Lab)

ஒன்று உருவாக்கப்படும். சமூகத்தில் விளிம்புநிலையில் வாழும் மக்கள், பட்டியலின மற்றும் பழங்குடியினரால் தொடங்கி நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு இந்த மையம் முன்னுரிமை அளிக்கும்.

103. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் (TANSIDCO) **திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம், திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் ஆகிய இடங்களில் மொத்தம் 80 ஏக்கர் பரப்பளவில், 32 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்கென மூன்று புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும்.** இதன் மூலம் 3,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

104. குறுந்தொழில் முனைவோர்கள் உடனடியாக தொழில் துவங்க, **1.2 ஏக்கர் பரப்பளவில் 4 அடுக்குகள் கொண்ட அடுக்குமாடி ஆயத்தத் தொழில் வளாகம் (Plug and Play) 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம் குறிச்சி தொழிற்பேட்டையில் தமிழ்நாடு சிறுதொழில்**

**வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் கட்டப்படும்.** இதன்மூலம் 1,000 நபர்களுக்கு நேரடியாகவும் 500 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

105. **மதுரையில் 26,500 சதுர அடி பரப்பளவில் தொழில் புத்தாக்க மையம் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.** தொழில்துறையில் புத்தாக்கத்தை ஊக்குவிக்கவும், தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்க நிறுவனங்களை மேம்படுத்தவும் இம்மையம் உதவிடும். இம்மையத்தில், புத்தொழில் தொடங்குபவர்கள் (Startups) கூட்டாகப் பணிபுரியும் வசதி மற்றும் தொழில் 4.0 உபகரணங்கள், தயாரிப்புகள் மேம்பாட்டு மையம், முன்மாதிரி தயாரிப்பு வசதி (prototyping) மற்றும் பயிற்சி நிலையம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

106. மேலும், மதுரை மாவட்டத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்கு உதவும் வகையில், **தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் சக்கிமங்கலம் தொழிற்பேட்டையில் 5 ஏக்கர் நிலப்பரப்பில், 118 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூன்று அடுக்குகள் கொண்ட**

**அடுக்குமாடித் தொழில் வளாகம் கட்டப்படும். இதன் மூலம், 4,500 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.**

107. குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், விருதுநகர் மாவட்டம் வெள்ளயாபுரத்தில் ஆயத்தஆடை உற்பத்திக்கும், செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கத்தில் சித்த மருத்துவ மூலிகைப் பொருட்கள் தயாரிப்பிற்கும், கன்னியாகுமரி மாவட்டம் அழகியபாண்டியபுரத்தில் ஆயத்தஆடை உற்பத்திக்கும், சேலம் மாவட்டம் இராக்கிப்பட்டியில் பட்டுநூல் உற்பத்திக்கும், நாமக்கல் மாவட்டம் கத்தேரியில் துணிநூல் வார்ப்பிற்கும் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் இராங்கியத்தில் ஆயத்தஆடை உற்பத்திக்கும் 6 குறுங்குழுமத் திட்டங்கள் தமிழ்நாடு அரசு மானியத்துடன் 25 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டில் பொது வசதி மையங்களுடன் அமைக்கப்படும்.

108. நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்த சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, 16 கூட்டுறவுத் தேயிலை உற்பத்தி தொழிற்சாலை உறுப்பினர்களால் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட பசுந்தேயிலைக்கு

ஊக்கத்தொகையாக கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம் வழங்கப்படும். சுமார் 27 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில் இதற்காக ஒன்பது கோடி ரூபாய் செலவிடப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு 1,557 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பம்**

109. அரசு நிர்வாக நடைமுறைகளை எளிமையாக்கி, வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வரும் நோக்கோடு அரசு அலுவலகங்களை முழுமையாக கணினிமயமாக்கும் திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தி, சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகிறது. வரும் 2024-25 ஆம் நிதியாண்டில் பல்வேறு துறைத் தலைமை அலுவலகங்களுக்கும் சார்பு அலுவலகங்களுக்கும் தேவையான மென்பொருட்கள் மற்றும் கணினிகள் உள்ளிட்டவற்றை வழங்கவும், அலுவலர்களுக்கு உரிய திறன்பயிற்சி அளித்து மின் அலுவலகத் திட்டத்தை (e-Office) விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 30 கோடி ரூபாய்

2024-25 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளது.

110. அரசுசார் இணையவழிச் சேவைகளை மேலும் துரிதமாக அளித்திடும் வகையில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மூலம் பேரிடர் தரவு மீட்பு வசதிகளுடன் கூடிய மேகக் கணினியக் கட்டமைப்பு கொண்டதாக மாநிலத் தரவு மையம் அடுத்த 5 ஆண்டுகளில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

111. இணைய உலகத்தின் தகவல் பரிமாற்றத்தை மேலும் பரவலாக்கும் வகையில், சென்னை போன்றே கோவை, மதுரை, திருச்சி, சேலம் உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளிலும் ஆயிரம் முக்கிய இடங்களில் இலவச வைஃபை சேவைகள் வழங்கப்படும்.

112. கடந்த 2000 ஆம் ஆண்டில் சென்னையில் டைடல் நிறுவனத்தை அமைத்து தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வித்திட்டவர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அவர் வகுத்துத் தந்திட்ட தகவல் நெடுஞ்சாலையில், தமிழ்நாட்டின் அனைத்துப்

பகுதிகளும் இணைந்திட வேண்டும் என்ற நோக்கில், **மதுரையில் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 இலட்சத்து 40 ஆயிரம் சதுரஅடி பரப்பளவிலும், திருச்சியில் 345 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 இலட்சத்து 30 ஆயிரம் சதுரஅடி பரப்பளவிலும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.** மேலும், தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி ஆகிய இடங்களில் புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் (Neo Tidel Parks) அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 13,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

113. உலக அளவில் அண்மைக்காலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள புதிய தொழில்நுட்பமான செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) குறித்தும், அது தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு தரப்பிலும் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்தும் இந்த அரசு கவனமுடன் ஆய்வு செய்து வருகிறது. கல்வி, வேலைவாய்ப்பு, தொழில்துறை, ஆராய்ச்சி மற்றும் மருத்துவத் துறைகளில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதன் வாய்ப்புகள் குறித்த ஆக்கபூர்வமான வழிகாட்டுதல்களையும், இப்புதிய தொழில்நுட்பத்தின்

பயன்பாட்டினை வழிநடத்திடத் தேவைப்படும் வரையறைகளைத் தெளிவாக வகுத்திடவும், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் "தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு இயக்கம்" (Tamil Nadu Artificial Intelligence Mission) ஒன்று ஏற்படுத்தப்படும்.** தமிழ்நாட்டின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களின் பேராசிரியர்கள், மின்னணு தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் துறை வல்லுநர்கள் இந்த அமைப்பில் இடம் பெற்றிருப்பர்.

114. நாட்டிலேயே வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான கோயம்புத்தூரில், தகவல் தொழில்நுட்பம், வாழ்வியல் அறிவியல், விண்வெளி, பொறியியல் துறைக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு போன்ற உயர்தொழில்நுட்ப அலுவலகங்களுக்கான தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதனைக் கருத்திற்கொண்டு, 20 இலட்சம் சதுரஅடியில், இரண்டு கட்டங்களாக 1,100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதிநவீன வசதிகளுடன் தகவல் தொழில்நுட்பப் பூங்கா கோவை விளாங்குறிச்சியில் அமைக்கப்படும்.

**நீர்வளம்**

115. நீரின்றி அமையாது உலகு - என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு மாநிலத்தின் நீர் வளங்களை உரிய முறையில் பராமரித்து, பாதுகாப்பதற்கென பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

116. அண்மையில் மிக்ஜாம் புயலால் சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22 நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தென் மாவட்டங்களில் வரலாறுகாணாத மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பினை சீரமைப்பதற்கு 280 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

117. பருவகால மழைநீரை முறையாக சேமிக்கவும், பாசனத்திற்கு உரிய நீரை உறுதி செய்யவும், வரும் நிதியாண்டில் தரைகீழ் தடுப்பணை, கால்வாய் சீரமைப்பு, புதிய அணைக்கட்டு போன்ற நீர் செறிவூட்டும் கட்டுமானங்களும் நீர்ப்பாசனப் பராமரிப்புப் பணிகளும் 734 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

மேற்கொள்ளப்படும். அணைகள் மற்றும் கதவணைகளில் பழுதடைந்துள்ள கதவுகளை மாற்றி, புதிய கதவுகள் அமைத்திடவும், பழுது பார்த்துப் பராமரிக்கவும் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

118. தமிழ்நாட்டில் காவிரி வடிநிலத்தில், நீர் மேலாண்மையினை திறம்படச் செய்யும்பொருட்டு, கல்லணைக் கால்வாயினை "நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல்" திட்டத்தின் முதற்கட்டமாக 1,037 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நிறைவு பெறும் தருவாயில் உள்ளன. **தற்போது இரண்டாம் கட்டமாக வரும் நிதியாண்டில் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 2.3 இலட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.**

119. மாநிலத்தில் உள்ள நீர்வளங்களின் மேலாண்மையை திறம்பட மேற்கொள்வதற்கு, தமிழ்நாடு நீர்வளத் தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பை

30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த இணைய தகவல் தளம் விரைவில் தொடங்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நீர்வளத் துறைக்கு 8,398 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பசுமை ஆற்றல்**

120. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி வரும் 2030-ம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டினை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக மாற்றிடுவதற்கு தற்போதைய மின் தேவையைக் காட்டிலும் இரண்டு மடங்கு கூடுதலாக மின்சாரம் தேவைப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உயர் இலக்கினை அடைவதற்கு, வரும் காலங்களில் பசுமை ஆற்றல் முக்கியப் பங்காற்றிடும். வரும் 2030-ம் ஆண்டிற்குள், 100 பில்லியன் யூனிட் கூடுதல் புதுப்பிக்கத்தக்க பசுமை ஆற்றலை தமிழ்நாட்டில் உருவாக்கி, நாட்டிலேயே தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கு உரிய திட்டங்கள் வகுக்கப்படும். அந்த இலக்கை நோக்கிய பசுமைப் பயணத்தில், முதற்கட்டமாக

புதிய பசுமை ஆற்றல் நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சூரிய மின்சக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தியோடு, பசுமை ஹைட்ரஜன், நீரேற்று புனல் மின் உற்பத்தி மற்றும் பிற புதிய பசுமை ஆற்றல் முயற்சிகள் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் இந்நிறுவனம் செயல்படுத்தும்.

121. அண்மையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 18,429 மெகாவாட் பசுமை ஆற்றல் ஆதாரங்களை தமிழ்நாட்டில் அமைப்பதற்கான, 32 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதில் 2,570 மெகாவாட் பசுமை ஆற்றல் மின் உற்பத்தி செய்வதற்கான அனுமதி இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

122. மேலும், தமிழ்நாட்டில் 11,500 மெகாவாட் திறனுள்ள நீரேற்று புனல் மின் நிலையங்கள் அமைப்பதற்கு உகந்த 12 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பொதுத்துறை மற்றும் தனியார் பங்கேற்புடன், சுமார் 60,000 கோடி ரூபாய் முதலீட்டில் இந்தப் புதிய நீரேற்று புனல் மின் நிலையங்கள் உருவாக்கப்படும்.

**காலநிலை மாற்றம்**

123.

**“சிறகிலிருந்து பிரிந்த**

**இறகு ஒன்று**

**காற்றின் தீராத பக்கங்களில்**

**ஒரு பறவையின் வாழ்வை**

**எழுதிச் செல்கிறது”**

படிமக் கவிஞர் பிரமிளின் கவிதை வரிகளை சுற்றுச்சூழல் அமைப்பில் பொருத்திப் பார்த்தால் இந்தப் பிரபஞ்சத்தில் வாழும் அனைத்து உயிரினங்களையும் இயற்கை வளங்களையும் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கொடையளிப்பது மானுடக் கடமை என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. நாட்டிலேயே பல்லுயிர் இனங்களின் தாயகமாக தமிழ்நாடு திகழ்கிறது. இருப்பினும், மாறி வரும் காலச்சூழலில் உலகெங்கும் உள்ள சில அரிய வகை உயிரினங்கள் அழிந்து வரும் நிலை காணப்படுவதால், அவ்வகை உயிரினங்களைப் பாதுகாத்திட வேண்டிய தேவைக் குறித்து பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு அமைப்பு (International Union for Conservation of Nature) உட்பட பல அமைப்புகள்

தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. எனவே, பல்லுயிர் நலன் காக்கும் முயற்சியாக, அழிந்து வரும் உயிரினங்கள் பாதுகாப்பு நிதி ஒன்றை 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க, தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென முதற்கட்டமாக ஐந்து கோடி ரூபாயை அரசு வழங்கும். பிற அரசு நிறுவனங்கள், பெருநிறுவன சமூகப் பொறுப்பு நிதி, தேசிய சுற்றுச்சூழல் அமைப்புகளின் உதவியோடு, அழிந்துவரும் மற்றும் விளிம்பு நிலையிலுள்ள உயிரினங்களைப் பாதுகாக்க உரிய திட்டங்கள் வகுக்கப்படும்.

124. காலநிலை மாற்ற இயக்கம், பசுமை தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈரநில இயக்கம் ஆகிய முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியும், 15 புதிய ராம்சார் ஈர நிலங்கள் மற்றும் 5 சரணாலயங்களைக் கொண்டு பசுமைப் பயணத்தில் நாட்டிற்கே வழிகாட்டியாக தமிழ்நாடு திகழ்கிறது. இதன் தொடர்ச்சியாக, **தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களில் 1,076 கிலோமீட்டர் கடற்கரைப் பகுதியை மையமாகக் கொண்டு கடலோர வளங்களை மீட்டு எடுப்பதற்காக 1,675 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "நெய்தல் மீட்சி இயக்கம்" என்ற திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.** கடற்கரையோர

பல்லுயிர்ப் பெருக்கம், கடற்கரை பாதுகாப்பு, கடற்கரையோரச் சமூகங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் கடலோரப் பகுதிகளில் மாசுக் கட்டுப்பாடு உள்ளிட்ட 4 முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது இத்திட்டம்.

125. இத்திட்டத்தின் மூலம், நீலப் பொருளாதாரத்தின் திறனை பயன்படுத்திக்கொள்வதுடன் சதுப்பு நிலங்கள், பவளப்பாறைகள் மற்றும் உப்பு சதுப்பு நிலங்களை மீட்டெடுக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும். அலையாத்திக் காடுகளைப் (Mangroves) பாதுகாப்பது, மன்னார் வளைகுடாவிலுள்ள கரியாச்சல்லி தீவுப்பகுதிகளில் பவளப்பாறைகளை புனரமைக்கும் திட்டம் ஆகிய பணிகளும் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், செங்கல்பட்டு மாவட்டம் கடம்பூர் பகுதியில் 137 ஹெக்டேர் பரப்பளவில், லண்டன் கியூ கார்டன் (London Kew Gardens) நிறுவனத்தின் துணையோடு, 345 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாபெரும் பல்லுயிர் பாதுகாப்புப் பூங்கா ஒன்று அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், நாகப்பட்டினம் மற்றும் சென்னை ஆகிய பகுதிகளில், கடல் ஆமை பாதுகாப்பு மையங்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம்

மனோரா பகுதியில் சர்வதேச கடற்பசு பாதுகாப்பு மையம் ஒன்றும் அமைக்கப்படும். எண்ணூர் கடற்கழிப் பகுதியினை (Ennore Creek) 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாத்து மீட்டெடுப்பதற்கான பணிகள் செயல்படுத்தப்படும்.

126. தமிழ்நாட்டிலுள்ள கடற்கரைகளை உலகத்தரம் வாய்ந்த வசதிகளுடன் மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. முதற்கட்டமாக, செங்கல்பட்டில் உள்ள கோவளம் கடற்கரைக்கு நீலக் கொடி சான்றிதழ் பெறப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, **சென்னையில் மெரினா கடற்கரை, இராமநாதபுரத்தில் அரியமான், தூத்துக்குடியில் காயல்பட்டினம், திருநெல்வேலியில் கோடாவிளை, நாகப்பட்டினத்தில் காமேஸ்வரம், புதுக்கோட்டையில் கட்டுமாவடி, கடலூரில் சில்வர் கடற்கரை, விழுப்புரத்தில் மரக்காணம் ஆகிய இடங்களிலுள்ள முக்கியக் கடற்கரைப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, நீலக் கொடி கடற்கரைகள் சான்றுகளை பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.** நெகிழிக் கழிவு

மேலாண்மை வசதிகளை அமைப்பதில், கடற்கரையோரச் சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களை ஈடுபடுத்தவும், கைவிடப்பட்ட மற்றும் பயனற்ற மீன்பிடிக் கருவிகளை அகற்றவும், நெகிழிக் கழிவுகளுக்கான சுழற்சிப் பொருளாதாரத் தீர்வுகளைச் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

127. தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராமங்களுக்கும் தரமான போக்குவரத்து சேவைகளைத் தொடர்ந்து வழங்கிட, புதிய பேருந்துகளை வாங்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந்நிதியாண்டில் 3,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும். இதுமட்டுமன்றி ஜெர்மன் வளர்ச்சி வங்கி (KfW) நிதியுதவியுடன் 500 மின் பேருந்துகள் கொள்முதல் செய்து இந்நிதியாண்டில் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும். கடந்த 1997 ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்திய சிற்றுந்து (Mini bus) திட்டம் தமிழ்நாடெங்கும் பெரும் வரவேற்பைப் பெற்றது. தற்போது, வேகமாக வளர்ச்சியடைந்து வரும் நகரங்களை ஒட்டிய ஊரகப் பகுதிகளிலும் போக்குவரத்துச் சேவையை வழங்கிடும்

நோக்கில் மாற்றியமைக்கப்பட்ட விதிமுறைகளுடன் சிற்றுந்து திட்டம் தமிழ்நாட்டில் விரிவுபடுத்தப்படும்.

128. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மகளிருக்கான இலவசப் பேருந்துக் கட்டண மானியத்திற்காக 3,050 கோடி ரூபாய், மாணவர்களுக்கான பேருந்துக் கட்டண மானியத்திற்காக 1,521 கோடி ரூபாய் மற்றும் டீசல் மானியத்திற்காக 1,800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சென்னை மெட்ரோ இரயில்**

129. தினந்தோறும் சுமார் மூன்று இலட்சம் பயணிகள் விரும்பிப் பயணிக்கும் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் 63,246 கோடி ரூபாய் செலவில் 119 கிலோமீட்டர் தூரத்திற்கு மூன்று வழித்தடங்களில் துரிதமாக நடைபெற்று வருகின்றன. முதற்கட்டமாக பூந்தமல்லி முதல் கோடம்பாக்கம் வரையிலான உயர் வழித்தடம் வரும் 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும். இந்த வரவு-செலவுத் திட்டத்தில்

சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்காக 12,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

130. கோவை மாநகரில் அவிநாசி சாலை மற்றும் சத்தியமங்கலம் சாலை வழித்தடங்களில் மெட்ரோ இரயில் திட்டத்திற்கென 10,740 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மதுரை மாநகரில் திருமங்கலம் மற்றும் ஒத்தக்கடை பகுதிகளை இணைத்திடும் வகையில் 11,368 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கைகளை ஒன்றிய அரசின் மூலதனப் பங்களிப்பு பெறுவதற்காக ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் அனுமதி கிடைத்தவுடன் இந்த இரு நகரங்களிலும் மெட்ரோ இரயில் அமைப்பதற்கான பணிகள் தொடங்கும்.

131. சென்னை மெட்ரோ இரயில் வழித்தடத்தை சென்னை விமான நிலையத்தில் இருந்து கிளாம்பாக்கத்தில் உள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் வரை நீட்டிப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை 4,625 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெறப்பட்டு, ஒன்றிய அரசின் மூலதனப்

பங்களிப்பிற்காக ஒப்புதல் கோரப்பட உள்ளது. மேலும், கோயம்பேடு முதல் ஆவடி வரையிலும், பூந்தமல்லி முதல் பரந்தூர் வரையிலுமான இரண்டாம் கட்டத்தின் நீட்டிப்பு வழித்தடங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

132. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து உருவாக்கப்படவுள்ள புதிய சிறப்பு அமைப்பு மூலம், சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு எதிரே மரபுசார் வடிவமைப்புடன் சுமார் 10 இலட்சம் சதுரஅடி பரப்பளவில் 27 தளங்களைக் கொண்ட முத்திரை பதிக்கும் ஓர் கட்டடம் 688 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். பொதுத்துறை, வணிக மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் அலுவலகத் தேவையினை இப்புதிய கட்டடம் நிறைவு செய்யும்.

133. தற்போதுள்ள பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் அருகில் உள்ள குறளகம் கட்டடம் அமைந்துள்ள பகுதியில், ஒருங்கிணைந்த பன்முகப் போக்குவரத்து வசதிகள் கொண்ட பேருந்து நிலையம் மற்றும் உயர்தர நவீன வசதிகள் கொண்ட

அலுவலக வளாகம் ஒன்று 823 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். இதில் அமையவுள்ள நவீன வசதியுடன் கூடிய பேருந்து நிலையம் அமைத்திடத் தேவையான 200 கோடி ரூபாய் நிதியை அரசு வழங்கிடும்.

134. அண்ணாநகர் (மேற்கு), கலைஞர் கருணாநிதி நகர் மற்றும் மந்தைவெளியில் அமைந்துள்ள பேருந்து நிலையங்கள் மற்றும் பணிமனைகளைத் தரம் உயர்த்தி நவீன வசதிகளுடன் கூடிய அலுவலகங்களும் வணிக வளாகங்களும் உருவாக்க விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படும்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்**

135. **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சார்ந்த தொழில் முனைவோர்களின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் மகத்தான வரவேற்பைப் பெற்றுள்ளது**. இத்திட்டத்தின் மூலம் 755 நபர்கள் 84 கோடி ரூபாய் மானியத்துடன் கூடிய 156 கோடி ரூபாய் கடன் வசதி பெற்றுப் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்குக்

கிடைத்த வரவேற்பினைக் கருதி, திருத்த மதிப்பீடுகளில் கூடுதலாக 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 120 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட CM Arise என்ற புதிய திட்டத்தின் கீழ், தொழில் தொடங்குவதற்கு 35 சதவீத வட்டி மானியத்துடன் பத்து இலட்சம் ரூபாய் வரை தொழில்முனைவோர் கடன் பெறலாம். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வரும் ஆண்டில் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

136. நகர்ப்புரப் பகுதிகளிலும், ஊரகப் பகுதிகளிலும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் முழுமையான சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 230 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். இத்திட்டத்தின் கீழ், **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் பயன்பெறும் வகையில் திருமணக் கூடம், உள்விளையாட்டுக் கூடம், கற்றல் மற்றும் பயிற்சி மையம்**

**போன்ற வசதிகள் கொண்ட 120 சமூகக் கூடங்கள் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

137. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களின் உயர்கல்விச் சேர்க்கையை உயர்த்திடவும், அவர்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய தங்குமிட வசதிகளை வழங்கிடவும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரி மற்றும் சென்னையில், ஐந்து நவீன மாணவர் விடுதிகள் கட்டும் பணிகள் 150 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, சென்னை, தஞ்சாவூர், தருமபுரி, நாமக்கல் மாவட்டங்களில் கல்லூரி மாணவியர் விடுதிகளும், மதுரையில் கல்லூரி மாணவர் விடுதியும், மொத்தம் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு கட்டப்படும். இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் பன்முகத் திறனை வளர்க்கும் விதமாக அவர்களுக்கென ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

138. **பழங்குடியினர் வாழ்விடங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும்,**

**‘தொல்குடி’ என்ற புதிய திட்டம் அடுத்த நான்கு ஆண்டுகளில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்**. இத்திட்டத்தின்கீழ், பழங்குடியினர் குடியிருப்புகளில் சாலை வசதி, குடிநீர், தெரு விளக்குகள், பாதுகாப்பான வீடுகளும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்படும். இந்த ஆண்டு, ஆயிரம் பழங்குடியின இளைஞர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்குத் தங்குமிட வசதிகள் கொண்ட நவீன தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து உரிய வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதற்கென தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

139. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்கீழ் இயங்கிவரும் அனைத்துப் பள்ளிகளிலும், 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classrooms) ஏற்படுத்தப்படும். மேலும், அனைத்துப் பள்ளிகளுக்கும் அதிவேக இணைய வசதிகள் ஏற்படுத்தப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஆதி திராவிடர்

மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 3,706 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர் நலன்**

140. சமூகநீதியை நிலைநாட்டுவதில் பெரும் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, நமது நாட்டிற்கே முன்னோடியாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வரும் தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சாதிவாரியான கணக்கெடுப்பினையும் இணைத்து நடத்திட வேண்டும் என்று ஒன்றிய அரசை இவ்வரசு வலியுறுத்தி வருகிறது.

141. தமிழ்நாட்டில் 1,353 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் தங்கிப் பயின்றுவரும் மாணவர்களுக்கு கட்டணமில்லா உணவு மற்றும் தங்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அண்மையில், விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு மாதாந்திர உணவு மானியம் 1,400 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கு 1,500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் 52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 விடுதிகளில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மாணவர்களின் தேவைக்கேற்ப 17 பள்ளி விடுதிகள், கல்லூரி விடுதிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பள்ளிப் படிப்பு உதவித்தொகை வழங்குவதற்காக 124 கோடி ரூபாயும், பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை வழங்குவதற்காக 237 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இம்மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குவதற்கு 193 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சிறுபான்மையினர் நலன்**

142. சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, அவற்றுக்குரிய சான்றிதழ்களை நிரந்தரமாக வழங்குவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த முடிவு, சிறுபான்மையினரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. வழிபாட்டுத் தலங்களுக்கு முறையான அனுமதி பெறுவதிலும், வழிபாட்டுத் தலங்களில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதிலும் உள்ள

இடர்பாடுகளைக் களைந்திட விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

143. பள்ளிவாசல்களையும், தர்காக்களையும் பழுதுபார்ப்பதற்கும் சீரமைப்பதற்கும் இந்த ஆண்டு பத்து கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை, வேலூர், தென்காசி மாவட்டத்தில் பொட்டல்புதூர் உள்ளிட்ட இடங்களிலுள்ள தர்காக்கள் இந்த ஆண்டு சீரமைக்கப்படும். தேவாலயங்களைப் பழுதுபார்ப்பதற்கும், சீரமைப்பதற்கும் இந்த ஆண்டு பத்து கோடி ரூபாய் மானியம் வழங்கப்படும். சென்னையில் சூளை, கடலூர் மாவட்டத்தில் விருத்தாச்சலம், சிவகங்கை மாவட்டத்தில் இடைக்காட்டூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ள தேவாலயங்களைப் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு 1,429 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறனாளிகள் நலன்**

144. மாற்றுத்திறனாளிகள் என்ற பெயரைச் சூட்டியது மட்டுமல்லாமல், அவர்களது நலனுக்காக பல்வேறு முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்பதை நாடறியும். அந்த வழியில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை பல்வேறு முன்னெடுப்புகளை எடுத்துவருகிறது. உலக வங்கி நிதியுதவியுடன் 1,763 கோடி ரூபாய் மதிப்பில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைத் திட்டம் (RIGHTS Project) செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகள் வசிக்கும் பகுதிகளிலேயே அவர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதோடு, அவர்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்தோடு, முதற்கட்டமாக, 15 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் வாயிலாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்கள் இல்லம் சார்ந்த சிகிச்சைகளும் வழங்கப்படும்.

145. புற உலகச் சிந்தனையற்ற மதி இறுக்கம் (Autism Spectrum Disorder) உடையோருக்குத் தொடுதிறன் சிகிச்சை, செயல்முறைப் பயிற்சி, இயன்முறைப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, சிறப்புக் கல்வி, தொழிற் பயிற்சி ஆகிய ஒருங்கிணைந்த மறுவாழ்வுச் சேவைகள் மட்டுமன்றி பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான ஆற்றுப்படுத்தல் சேவை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ஆகிய அனைத்து சேவைகளையும் ஓரிடத்திலேயே பெற்றிடும் வகையில், புற உலகச் சிந்தனையற்ற மதி இறுக்கம் உடையோருக்கான உயர்திறன் மையம் (Centre of Excellence for Persons with Autism Spectrum Disorders) ஒன்று 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் அமைக்கப்படும்.

**இந்து சமய அறநிலையத் துறை**

146. இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் கடந்த மூன்று ஆண்டுகளில் 1,290 திருக்கோவில்களில் திருப்பணிகள் நிறைவுபெற்று குடமுழுக்குகள் நடைபெற்றுள்ளன. நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் பழனி, திருவண்ணாமலை, திருவரங்கம், சமயபுரம் உள்ளிட்ட

11 திருக்கோவில்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. திருக்கோவில் சொத்துகளையும் உடமைகளையும் பாதுகாப்பதற்கு இந்த அரசு எடுத்த முயற்சிகளின் விளைவாக, 6,071 ஏக்கர் நிலமும் 25.34 இலட்சம் சதுர அடி மனைகளும் 5.04 இலட்சம் சதுர அடி கட்டடங்களும் திருக்கோவில்கள் வசமாக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த மதிப்பு 5,718 கோடி ரூபாய் ஆகும்.

147. மேலும், 143 திருக்கோவில்களில் உள்ள திருக்குளங்களைச் சீரமைக்க 84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்துசமய அறநிலையத் துறையின் பதிப்பகத் துறை மூலமாக 200க்கும் மேற்பட்ட அரிய நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளன. செங்கல்பட்டு மாவட்டம் திருநீர்மலை மற்றும் மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் அமைந்துள்ள திருக்கோவில்களுக்கு கம்பிவட ஊர்தி வசதி 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும். மேலும், ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோவில்களில் திருப்பணிகள் செய்திட இந்த ஆண்டு 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**சுற்றுலா**

148. தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலட்சிய இலக்கை எய்திடுவதில், சுற்றுலா மேம்பாடு ஒரு பெரும்பங்கை ஆற்றிடும் என இந்த அரசு உறுதியாக நம்புகிறது. இந்த நோக்கத்துடன், கன்னியாகுமரி, மதுரை, தஞ்சாவூர், திண்டுக்கல், கோயம்புத்தூர், திருவண்ணாமலை உள்ளிட்ட முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒருங்கிணைந்த சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல், புதிய சுற்றுலாத் தலங்களை உருவாக்குதல், கட்டமைப்பின் பராமரிப்பு, இளைஞர்களுக்குத் திறன் மேம்பாடு வாயிலாக வேலைவாய்ப்பு அதிகரித்தல் போன்ற பல்வேறு அம்சங்கள் இத்திட்டத்தில் அடங்கும். அரசு தனியார் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையை மேம்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், சுற்றுலா வளர்ச்சிக் குழுமங்கள் உருவாக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத்தலங்களை மேம்படுத்துவது குறித்து அனைத்து தரப்பினருடனும்

கலந்து ஆலோசித்து, உரிய திட்டங்களைத் தீட்ட இந்த வளர்ச்சிக் குழுமங்கள் உதவும்.

**கால்நடை பராமரிப்பு**

149. கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் உரிய இனப்பெருக்கத் தடை சிகிச்சைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த இயலாமல் போனதால், மாநிலத்தில் பல இடங்களில் தெரு நாய்களின் எண்ணிக்கை உயர்ந்து, அதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. எனவே, விலங்குகள் இனப்பெருக்கத் தடை திட்டத்தை மேலும் முறையாகச் செயல்படுத்திடவும், தமிழ்நாட்டின் பல இடங்களில் இயங்கிவரும் இனப்பெருக்கத் தடை மையங்களை மேம்படுத்திடவும் 2024-25 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 20 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். மேலும், தமிழ்நாடு விலங்குகள் நல வாரியத்திற்கு வரும் நிதியாண்டில் 11 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

**மீன்வளம் மற்றும் மீனவர் நலன்**

150. மீன்பிடித் தொழிலில், இந்தியாவில் ஐந்தாவது பெரிய மாநிலமாக தமிழ்நாட்டைத் திகழவைக்கும் நமது மீனவர்கள் மீது இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் இராமநாதபுரத்தில் நடைபெற்ற மீனவர் மாநாட்டில் 2 இலட்சத்து 77 ஆயிரம் மீனவர்கள் பயன்பெறும் வகையில், சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களும், புதிய பணிகளும் அறிவிக்கப்பட்டன. மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் குமரி மாவட்டங்களைச் சேர்ந்த பதிவுசெய்யப்பட்ட நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் அளவானது மாதம் ஒன்றிற்கு 3,400 லிட்டரிலிருந்து 3,700 லிட்டராக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மானிய விலையில் வழங்கப்படும் டீசல் எண்ணெயின் அளவு, விசைப்படகுகளுக்கு 18 ஆயிரம் லிட்டரிலிருந்து 19 ஆயிரம் லிட்டராகவும்,

இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு 4 ஆயிரம் லிட்டரிலிருந்து 4 ஆயிரத்து 400 லிட்டராகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

151. வரும் நிதியாண்டில், **கன்னியாகுமரி, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தஞ்சாவூர், மயிலாடுதுறை, திருவாரூர், செங்கல்பட்டு, விழுப்புரம், திருவள்ளூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் தூண்டில் வளைவு, மீன் இறங்கு தளம், தூர் வாருதல், செயற்கை மீன் உறைவிடங்கள் போன்ற கரையோரப் பாதுகாப்பு மற்றும் கட்டுமானப் பணிகள் 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**பால்வளம்**

152. ஆவின் நிறுவனத்தின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தி, பொதுமக்களுக்கு தரமான பால் தினந்தோறும் வழங்கிட அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது. அண்மையில், பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதனால், 3.87 இலட்சம் பால் உற்பத்தியாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் உள்ளிட்ட ஆவின் தொழிற்சாலைகளில் அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய தானியங்கி இயந்திரங்களைப் பொருத்திட 60 கோடி ரூபாய் மதிப்பில் நவீனமயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். பால் தரத்தை உறுதி செய்திட 21 கோடி ரூபாய் மதிப்பில் நவீன கருவிகள் பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் ஒன்றியங்களுக்கும் வழங்கப்படும்.

**கைத்தறி மற்றும் துணிநூல்**

153. **நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஜவுளிப் பொருட்களின் தரத்தை உயர்த்திடவும், தேவையான சந்தை வாய்ப்புகளை உருவாக்கிடவும் 20 கோடி ரூபாய் செலவில், கரூர், ஈரோடு, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் 10 சிறிய ஜவுளிப் பூங்காக்கள் அரசால் நிறுவப்படும்.** மருத்துவம், ஆட்டோமொபைல் மற்றும் பாதுகாப்பு போன்ற முக்கிய துறைகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப ஜவுளிகளின் உற்பத்தியை தமிழ்நாட்டில் மேம்படுத்துவதற்கும், உயர்த்துவதற்கும் இத்துறையில் ஏற்றுமதியின் வளர்ச்சியைத் தக்கவைக்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும்

தொழில்நுட்ப ஜவுளித் தொழிற்கொள்கை (Technical Textiles Policy) ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. புதிய பொருட்களை உருவாக்கவும், ஆராயவும் தனியார் நிறுவனங்களுக்கு மானியம் வழங்கும் விதமாக, **25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'தொழில்நுட்ப ஜவுளி மற்றும் செயற்கை இழை' துறைக்கென ஒரு சிறப்பு ஆராய்ச்சி மற்றும் தொழில் மேம்பாட்டு நிதியை இவ்வரசு அமைக்கும்.** மேலும், தொழில்நுட்ப ஜவுளித் துறையில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளில் வழங்கப்படும் மானியத்தை 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்த்தி, 10 ஆண்டு காலத்தில் வழங்கப்படும். இச்சலுகை நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும்.

154. நூற்புத் துறையில் பிற மாநிலங்களைவிட தமிழ்நாடு சிறப்பாகச் செயல்பட, நவீன தொழில்நுட்பத்தில் அதிகளவிலான முதலீடு மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இந்த நோக்கத்துடன், **அடுத்த 10 ஆண்டுகளில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நூற்புத் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டம் ஒன்று இந்த அரசால் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், 6 சதவீத வட்டி மானியம் வழங்கப்படும்**.

155. சென்னையில் நான்கு இலட்சம் சதுர அடி பரப்பளவில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் **கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்தும் கண்காட்சி அரங்கம், கைவினைப் பொருட்களுக்கான வடிவமைப்பு மற்றும் புத்தாக்க மையம், திறந்தவெளி விற்பனை அரங்கம், வணிக வளாகங்கள் உள்ளிட்ட புதிய ஒன்றிணைந்த வளாகம் 227 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

156. ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய கைவினைஞர் நலத் திட்டம் இந்த அரசு கடைபிடித்து வரும் சமூக நீதிக் கோட்பாடுகளுக்கு எதிரான கூறுகளைக் கொண்டதாக இருப்பதை உணர்ந்து, அதற்கு மாற்றாக, அதனினும் மேம்பட்ட கைவினைஞர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றினை வடிவமைத்து செயல்படுத்திட இந்த அரசு கருதுகிறது. இத்திட்டத்தின் கீழ், தையற்கலைஞர், மண்பாண்டம் வனைவோர், சிற்பக் கைவினைஞர் உள்ளிட்ட பல்வகைக் கலை மற்றும் கைவினைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர்க்கு தொழில்திறன்சார் மேம்பட்ட பயிற்சியுடன் அவர்கள் தொழிலை

நவீனப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்படும். 35 வயதிற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தங்கள் தொழிலை நவீன முறையில் விரிவுபடுத்தவும், கைவினைத் தொழிலில் ஈடுபட விரும்பும் புதிய விண்ணப்பதாரர்களுக்கு உரிய திறன் பயிற்சிகள் வழங்கியும் 25 சதவீதம் மானியத்துடன் கூடிய கடனுதவி வங்கிகள் மூலம் வழங்கப்படும். அவர்களின் சந்தைப்படுத்தும் திறனை உயர்த்துவதற்கான உரிய ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ், **ஆண்டுதோறும் 10,000 பேர் பயன்பெறும் வகையில் வரும் நிதியாண்டில் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படும்.**

**வீட்டுவசதி**

157. ஒற்றைச் சாளர முறையில் கட்டட அனுமதி வழங்குவதை எளிமைப்படுத்தி, இணையதளம் வாயிலாக அதிகபட்சம் 2,500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்குள் கட்டப்படும் குடியிருப்புக் கட்டுமானத்திற்கு (தரைத்தளம் அல்லது தரைத்தளம்

மற்றும் முதல் தளம்) உடனடியாகப் பதிவு செய்து **சுய சான்றிதழ் மூலமாக பொதுமக்கள் கட்டட அனுமதி பெறுவதற்கு புதிய வசதி அறிமுகப்படுத்தப்படும். மேலும் அவ்வாறு உடனடி பதிவு செய்யப்படும் கட்டடங்களுக்கு கட்டட அனுமதி மற்றும் பணி முடிவுச் சான்று பெறத் தேவையில்லை.**

**பொதுப்பணிகள்**

158. மதுரை மாநகரில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், சென்னை கிண்டியில் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, மதுரை அலங்காநல்லூர் அருகில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் ஆகியவற்றை மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே அழகிய முறையில் வடிவமைத்து பணிநிறைவு செய்து அனைவரது பாராட்டுகளையும் பெற்றது நமது பொதுப்பணித்துறை.

159. **சென்னையை உலகத்தரம் வாய்ந்த மாநகரமாக மாற்றியமைத்திட, சர்வதேச கண்காட்சிகள், பன்னாட்டுக் கூட்டங்கள் நடத்திடும் வகையில், உலகத்தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு அரங்கம் (Kalaignar Convention Centre)**

நவீன வசதிகளுடன் கிழக்குக் கடற்கரைச் சாலையில் முட்டுக்காடு பகுதியில் சுமார் மூன்று இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டடப்படவுள்ளது. 5000 இருக்கைகள் கொண்ட மாநாட்டுக் கூடம், 10,000 நபர்கள் பார்வையிடும் வசதிகொண்ட கண்காட்சி அரங்கம், கூட்ட அரங்குகள், கலை அரங்கம் ஆகிய வசதிகளுடன் அமையவுள்ள இந்தப் பன்னாட்டு அரங்கம் சிங்காரச் சென்னையின் நவீன அடையாளங்களுள் ஒன்றாகத் திகழும்.

160. தலைநகர் புதுதில்லியில் வைகை-தமிழ்நாடு இல்லம், 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 இலட்சம் சதுர அடி பரப்பளவில் விருந்தினர்கள், அலுவலர்கள் மற்றும் போட்டித்தேர்வு மாணவர்கள் தங்குவதற்கு உரிய வசதிகளுடன் திராவிடக் கட்டடக்கலை மரபில் வடிவமைக்கப்பட்டு புதிதாகக் கட்டப்படும்.

161. அண்மையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் அமைந்துள்ள வளாகத்தில், தமிழர்களின் தொன்மையான வரலாறு, பண்பாடு மற்றும் கலைகளை

ஒரே இடத்தில் அரங்கேற்றம் செய்யும் வகையில், நாட்டுப்புறப் கலைகள், சிற்பங்கள், கைவினை மற்றும் கைத்தறிப் பொருட்கள், தமிழ்நாட்டின் மரபுசார் தாவரங்களை உள்ளடக்கிய பசுமைப் பரப்புகள் ஆகியவை காட்சிப்படுத்தப்படும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், இந்த வளாகம் தமிழ்ப் பண்பாட்டின் முகவரியாகத் திகழும் வண்ணம் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

162. புராதனக் கட்டடங்களை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணிகளுக்கென இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாட்டில் உள்ள முத்தம்மாள் சத்திரம், திருவையாறில் உள்ள நூறாண்டு பழமையான திருமண மண்டபம், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள இயக்குநரக அலுவலகம் மற்றும் ஈரோடு கொடுமுடியில் உள்ள நெடுஞ்சாலைத் துறையின் பழமையான பயணியர் விடுதி, சென்னை கிண்டி பொறியியல் கல்லூரி புராதனக் கட்டடக் குவிமாடம் ஆகியவை பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.

163. பல்வேறு அரசு அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிக் கட்டடங்களின் வடிவமைப்பில் உலகளவில் வளர்ந்து வரும் நவீன போக்குகளையும் தமிழ்நாட்டின் கட்டிடக்கலை மரபுகளையும் கருத்திற்கொண்டு, புதிய கட்டட வடிவமைப்புக் கொள்கை ஆவணம் 'Future of Spaces' விரைவில் வெளியிடப்படும். கட்டட வடிவமைப்பில் அழகியல், நவீன தொழில்நுட்பம், பசுமைக் கட்டுமானம், பணிச்சூழலியல் போன்றவற்றை முறையாக நடைமுறைப்படுத்திடத் தேவையான வழிமுறைகள் அடங்கிய கொள்கையாக இது அமைந்திடும்.

**நெடுஞ்சாலைகள்**

164. பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் சாலைக் கட்டமைப்பின் தரத்தை தொடர்ந்து மேம்படுத்த இந்த அரசு உறுதியாக உள்ளது. முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இதுவரை 1,262 கி.மீ நீளத்திற்கு 2,587 கோடி ரூபாய் மதிப்பில் சாலை அகலப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 4,881 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

165. தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக 2,824 கோடி ரூபாய் செலவில் 16 புறவழிச்சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பருவமழைக் காலத்தில் போக்குவரத்து துண்டிக்கப்படாமல் இருக்க, 2,006 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,113 உயர்மட்டப் பாலப் பணிகள் எடுக்கப்பட்டு, 683 உயர்மட்டப் பாலப் பணிகள் முடிவடைந்து பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மீதமுள்ள 430 உயர்மட்டப் பாலங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

166. சிவகாசி நகருக்கு வெளிவட்ட சாலை அமைக்கும் பணியும், மன்னார்குடி நகருக்கு வட்டச் சாலை அமைக்கும் பணியும், திண்டுக்கல் நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணியும், திருச்சி ஸ்ரீரங்கம் இடையே உயர் மட்ட பாலம் அமைக்கும் பணியும், அவினாசி முதல் மேட்டுப்பாளையம் வரை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தும் பணியும் மற்றும் விழுப்புரம் மாவட்டம், மாரங்கியூர்-ஏனாதிமங்கலம் சாலையில் கோரையாறு ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி ஆகியவை 665 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு

மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

167. கிழக்குக் கடற்கரைச் சாலையில், திருவான்மியூர் முதல் உத்தண்டி வரையிலுள்ள 14.6 கி.மீ. நீளமுள்ள பகுதியில் காணப்படும் பெருமளவிலான போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடும் வகையில், நான்குவழி உயர்மட்ட வழித்தடம் ஒன்றை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

168. ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு (CRIDP) 8,365 கோடி ரூபாயும் சென்னை எல்லைச் சாலை திட்டத்திற்காக 2,267 கோடி ரூபாயும் சென்னை – கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டத்திற்கு 908 கோடி ரூபாயும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

169. கடந்த 40 ஆண்டுகளாக பயன்பாட்டில் இல்லாத கடலூர் சரக்குத் துறைமுகம், தற்போது 150 கோடி ரூபாய் செலவில் கூடுதல் வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அத்துறைமுகத்தை ஆண்டொன்றிற்கு சுமார் 35 இலட்சம் டன்

சரக்குகள் கையாளும் வசதி கொண்டதாகத் தரம் உயர்த்திட, உரிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இதன் மூலம், தமிழ்நாட்டின் மத்திய மண்டலம் பெரும் பொருளாதார வளர்ச்சி பெறும்.

170. தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த முக்கிய சாலைக் கட்டமைப்புத் திட்டங்களை, சிறந்த மேலாண்மை முறைகளை பின்பற்றிச் செயல்படுத்திட, ஒரு சட்டப்பூர்வ அமைப்பை உருவாக்க முடிவெடுக்கப்பட்டு, '**தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம்**' **(Tamil Nadu State Highways Authority) அமைத்திடும் சட்ட முன்வடிவு நடப்புக் கூட்டத்தொடரில் அறிமுகப்படுத்தப்படும்.** இதன் மூலம், அரசு தனியார் பங்களிப்புடன் மாநிலத்தில் சாலைக் கட்டமைப்பு வளர்ச்சிக்கான முதலீடுகளை பெருமளவில் ஈர்க்க இயலும். இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைக்கு 20,043 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முன்னாள் படைவீரர்கள் நலன்**

171. தாய்நாட்டிற்காக நம் நாட்டின் எல்லைகளில், பல்வேறு கடினமான சூழல்களில் நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்திடும் நோக்குடன் தன்னலமற்ற சேவைகள் செய்துவரும் நமது முன்னாள் படைவீரர்களின் நலனிற்காக இந்த அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. வீட்டுவரித் தொகையினை மீளப்பெறும் சலுகை, தற்போது கைம்பெண்கள், போரில் ஊனமுற்ற படைவீரர் போன்ற சில பிரிவினருக்கு மட்டும் வழங்கப்படுகிறது. வரும் நிதியாண்டிலிருந்து, குடியிருப்புகள், சொத்துவரி, வீட்டுவரித் தொகையினை மீளப்பெறும் இத்திட்டத்தினை அனைத்து முன்னாள் படைவீரர்களுக்கும் நீட்டிப்பு செய்து வழங்கிட ஆவன செய்யப்படும். இதனால், சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் முன்னாள் படைவீரர்கள் பயன் பெறுவர்.

**அரசு ஊழியர் நலன்**

172. மாநிலத்தில் உள்ள தெரிவு முகமைகளான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்,

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகியவற்றின் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் வெவ்வேறு அரசுத் துறைகளிலுள்ள காலிப் பணியிடங்களுக்காக இதுவரை 27,858 அரசுப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இது தவிர, பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக 32,709 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். ஆக மொத்தம் இந்த அரசு பொறுப்பேற்ற 2½ ஆண்டுகளில் 60,567 பேர்களுக்கு அரசுப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 10,000 பணியிடங்களை நடப்பு நிதி ஆண்டிலேயே நிரப்பும்பொருட்டு உரிய நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொண்டு வருகிறது.

173. அரசு அலுவலர் குறைந்த வாடகையிலான குடியிருப்புகளின் தேவை அதிகரித்து வருவதை நிறைவு செய்யும் வகையில், சென்னை சைதாப்பேட்டை தாடண்டர் நகரில் 147 கோடி ரூபாய் செலவில், மூன்று இலட்சம் சதுர அடி பரப்பளவில் 95 B மற்றும் 133 C வகை குடியிருப்புகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

174. ஓய்வூதியதாரர் இறக்க நேரிட்டால், குடும்ப உறுப்பினர்களுக்கு 'தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தில்' நிதியுதவியாக 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது. 2023-24 ஆம் ஆண்டில், 31-01-2024 வரை, 19,134 ஓய்வூதியதாரர் குடும்ப உறுப்பினர்களுக்கு 96 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**இலங்கைத் தமிழர் நலன்**

175. இலங்கைத் தமிழர்கள் நலனிற்காகவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு புதிதாக 7,469 வீடுகள் கட்டித்தரப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. 176 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதற்கட்டமாக 3,510 வீடுகளுக்கான பணிகள் தொடங்கப்பட்டதில், இதுவரை 1,591 வீடுகளின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நிறைவுபெறும் தருவாயில் உள்ளன. விரைவில் இரண்டாம் கட்டப் பணிகளும் தொடங்கும்.

**மக்கள் குறைதீர்ப்பு**

176. பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண்பதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருகிறது. முதல்வரின் முகவரி திட்டத்தில் இதுவரை பெறப்பட்ட 20.31 இலட்சம் மனுக்களில், 19.69 இலட்சம் மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்பட்டுள்ளன. மனுக்களுக்குக் காணப்பட்ட தீர்வுகளின் மீது, மனுதாரர்களிடமிருந்து பின்னூட்டங்கள் பெறப்பட்டு உரிய மேல்நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

177. பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்குச் செல்லவேண்டிய அவசியமின்றி, அவர்கள் அதிகமாக அணுகும் பதிமூன்று அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று, **30 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ் இதுவரை, 3.5 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.**

178. இதன் அடுத்தகட்டமாக, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும், இனி ஒவ்வொரு மாதமும் ஒருநாள் வட்ட அளவில் ஒரு ஊரில் ஒருநாள் முழுவதும், களஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளை கேட்டறிந்து, **அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும், தங்குதடையின்றி மக்களைச் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' என்ற புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது**. இவ்வாறு, ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் கடைக்கோடி மக்களை தேடிச்சென்று அவர்களுக்குத் தேவையான அரசு சேவைகளை உடனுக்குடன் வழங்கிட இந்த அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்.

**சிறப்புத்திட்டச் செயலாக்கம்**

179. சிறப்புத்திட்டச் செயலாக்கத் துறையின் மூலம் பல்வேறு அரசு அறிவிப்புகளுக்கான ஆணைகள் வெளியிடப்படுவதை, தொடர்ந்து கண்காணிப்பதோடு மட்டுமல்லாமல், **அத்திட்டங்களின் பலன்கள் தாமதமின்றி மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்திட,**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'கள ஆய்வில் முதலமைச்சர்' என்ற புதிய முன்னெடுப்பின் மூலம் மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டார்கள்.** இதுவரை ஆறு மண்டலங்களில் 24 மாவட்டங்களுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநிலத்தில் சமூகப் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்திடச் செயல்படுத்தப்படும் மாபெரும் கட்டமைப்புத் திட்டங்களை "முத்திரைத் திட்டங்கள்" (Iconic Projects) என முன்னுரிமை அளிக்கப்பட்டு, அதன் முன்னேற்றங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தொடர் கண்காணிப்பின் விளைவாக, திட்டப் பணிகள் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**சட்டம் மற்றும் ஒழுங்கு**

180. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை முறையாக பேணிப் பாதுகாத்திடவும், சமூக நல்லிணக்கத்தை நிலைநிறுத்திடவும் இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்ததன் விளைவாக, தமிழ்நாட்டில் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து அமைதி நிலவி வருகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளுடைய

பாதுகாப்பிற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து காவல்துறையின் செயல்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதனால், தேசிய அளவில் பெண்களுக்குப் பாதுகாப்பான நகரங்களின் பட்டியலில் தமிழ்நாட்டிலுள்ள நகரங்கள் முன்னிலை வகிக்கின்றன. மேலும், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் கடத்தல்களைத் தடுப்பதற்கும் இந்த அரசு மிகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பொதுமக்கள் அச்சமின்றி இருக்கவும், அவர்தம் உடைமைகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், 'திறன்மிகு காவலர்' (SMART KAVALAR) என்ற புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 46 புதிய காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டன. அவற்றில் 39 அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் அடங்கும்.

181. மாநிலத்திலுள்ள அனைத்து 1,551 காவல் நிலையங்களிலும் 372 சிறப்பு பிரிவுகளிலும் காவல்துறையினை நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலைப்பின்னல் திட்டத்தை (CCTNS) மேம்படுத்தி, பொதுமக்களிடமிருந்து இணையவழியில் புகார்களைப் பதிவு செய்வது, பிற துறைகளுடன் தகவல்கள்

பரிமாற்றம் போன்ற அம்சங்களுடன் இணைய வழியில் CCTNS 2.0 என்ற ஒரு புதிய திட்டம், 124 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

182. தீயணைப்புத் துறையினை வலுப்படுத்தவும், நவீனமயமாக்கவும் 15வது நிதிக்குழுவின் நிதி உதவியோடு, 373 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும். நவீன தீயணைப்பு வாகனங்கள் மற்றும் சிறப்பு மீட்புக் கருவிகள் வாங்கிட 137 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. சிறைச்சாலைகளை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ், 104 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் பகுதியில் ஒரு புதிய உயர்பாதுகாப்பு கொண்ட நவீன சிறைச்சாலை கட்டப்படும். மேலும், தடய அறிவியல் துறையை முழுமையாக நவீனமயமாக்கும் நோக்கோடு, ஒரு புதிய திட்டம் நிறைவேற்றப்படும். இந்த ஆண்டு, 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடய அறிவியல் துறைக்குத் தேவையான புதிய கருவிகள், கணினி ஆகியவை வழங்கப்படும்.

**வணிகவரிகள்**

183. தமிழ்நாட்டில் வணிகர்களிடமிருந்து வரி நிலுவையை எளிய முறையில் வசூலிப்பதற்கு சமாதான திட்டம் ஒன்றை இந்த அரசு அறிவித்தது. இத்திட்டத்தின் கீழ், ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் கீழ் வரி, அபராதம், வட்டி ஆகியவற்றை நீண்டகாலமாக நிலுவையில் வைத்திருந்த சிறு வணிகர்களுடைய 143 கோடி ரூபாய் நிலுவைத் தொகை அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

184. வணிகவரித் துறையின் வரி வருவாயைப் பெருக்குவதிலும் வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடித்து குறைப்பதிலும், வணிக வரித் துறைக்கு உதவி செய்திட ஹைதராபாத் இந்திய தொழில்நுட்பக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு பெருந்தரவு பகுப்பாய்வு மென்பொருளை பயன்படுத்தி (Big Data Analytics Solution) துறையின் செயல்பாடுகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், சரக்கு மற்றும் சேவை வரி வருவாயைப் பெருக்கவும். வரி ஏய்ப்பைத் தடுத்திடவும் தரவுகள் பகுப்பாய்வு மையம் (Data Analytics Unit) ஒன்று தலைமை அலுவலகத்தில்

புதிதாக ஏற்படுத்தப்படும். நிகழ் நேரத்தில் கணிப்பாய்வை மேற்கொள்ளும் வகையில், தகுந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பெருந்தரவு கணிப்பாய்வு மென்பொருள் கணினி கட்டமைப்புடன் அமைய இருக்கும் இந்தப் புதிய அமைப்பை ஏற்படுத்திட 4 கோடி ரூபாய் செலவிடப்படும்.

185. பத்திரப்பதிவுத் துறையின் கணினிமயமாக்கலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில், ஸ்டார் 3.0 கீழ், பத்திரப்பதிவு முறையில் பெருந்தரவு பகுப்பாய்வு, செயற்கை நுண்ணறிவு, இயந்திர வழி கற்றல் ஆகிய உயர்தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி பத்திரப்பதிவுச் சேவையை நவீன முறையில் வழங்கிட, 320 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பதிவுத்துறை அலுவலகங்களுக்குப் புதிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், கடந்த 2 ஆண்டுகளில் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான, வலுவிழந்த கட்டடங்களில் முதற்கட்டமாக 71 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அவ்விடங்களில் புதிய

கட்டடங்கள் கட்ட 133 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**பேரிடர் மேலாண்மை**

186. நிகழ் நேர மழைப்பொழிவு மற்றும் வானிலை அளவீடுகளை பெறுவதற்காக 1,400 புதிய தானியங்கி மழைமானிகளையும், 100 புதிய தானியங்கி வானிலை நிலையங்களையும் நிறுவிட அரசு 32 கோடி ரூபாய் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும், வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் அதிதிறன் மிக்க விரைவான கணினிச் சேவைகளைப் பெறவும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன் [Space Application Centre (SAC)] புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

187. வெள்ளம், புயல், நிலஅதிர்வு போன்ற இயற்கைப் பேரிடர்களை கண்காணித்து, பேரிடர் அபாயக் குறைப்பிற்கான கள நிலவரங்களுக்கு உகந்த செயல்பாட்டு உத்திகளை வகுக்க ஏதுவாக "தொழில்நுட்ப மையம்" ஒன்றும் அமைக்கப்படும். வானிலை முன்னறிவிப்பை வலுப்படுத்தும் வகையில்,

இராமநாதபுரம் மற்றும் ஏற்காடு ஆகிய இடங்களில் இரண்டு சி-பேண்ட் டாப்ளர் ரேடார்கள் (Doppler Radar) 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**நிதி மேலாண்மை**

188. நமது மாநிலத்தின் கடன் பொருளாதாரத்தின் (Credit Economy) அளவு, வரவு-செலவுத் திட்டத்தை விட மூன்று மடங்கு அதிகமாகும். எனவே, மாநிலத்தின் பரவலான வளர்ச்சிக்கு வலுவான கடன் பொருளாதாரம் இன்றியமையாததாகும். இதனை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு, வேளாண்மை, சிறு, குறு நிறுவனங்கள், மகளிர் சுயஉதவிக் குழு, கல்வி ஆகிய முன்னுரிமைத் துறைகளுக்கு கடன் வழங்கும் வங்கிகளுக்கு, முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு, வரும் நிதியாண்டிற்கென 8 இலட்சம் கோடி ரூபாய் என உயர் இலக்கினை இந்த அரசு நிர்ணயித்துள்ளது. இது, கடந்த ஆண்டைவிட 14 சதவீதம் அதிகமாகும்.

189. துரிதமான நிதி மேலாண்மை (Cash Management) மற்றும் கடன் நிலைத்தன்மை (Debt Sustainability) ஆகியவையே

சிறந்த நிதி மேலாண்மையின் தூண்கள் ஆகும். பல்வேறு துறைகளின் சார்பாக எண்ணற்ற வங்கிக் கணக்குகளில் சேமிப்பு நிதியினைப் பயன்படுத்தாமல் வைத்துள்ள நிலையில், மறுபுறம் அரசு கடன் பெற்று செலவினங்களை மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையை மாற்றிட, பல்வேறு துறைகளில் உள்ள திட்டங்களில் பயன்படுத்தப்படாத சேமிப்புப் பணத்தை அரசிற்குத் திரும்பச் செலுத்திட, இந்த அரசு சிறப்புப் பணிக்குழு ஒன்றை அமைத்தது.

190. மேலும், இதுபோன்ற நிகழ்வுகளை வருங்காலத்தில் தடுப்பதற்கு, பல்வேறு துறைகளுக்கு அவர்களின் தேவைக்கேற்ப, உரிய நேரத்தில் நிதி விடுவிப்பதற்கான தொழில்நுட்ப ரீதியான தீர்வை இந்த அரசு உருவாக்கியுள்ளது. இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ள பொது நிதிக் கண்காணிப்பு அமைப்பு (PFTS), 13 துறைகளில், 36 முக்கியத் திட்டங்களில் அரசு நிதியினை விடுவிப்பதிலிருந்து பயனாளிகளின் வங்கிக் கணக்கில் அந்நிதி சென்று சேரும்வரை கண்காணிக்க முடியும். இதன் மூலம், திட்டங்களின் செயல்படுத்தும் வேகத்திற்கு ஏற்றார்போல் அரசு நிதி விடுவிக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, அரசுக்கு தேவைக்குமேல் கடன் வாங்காமல், நமது வட்டிச் செலவினத்தையும் குறைக்க உதவுகிறது.

191. நடப்பு நிதியாண்டில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறை இவ்வரசால் 01-04-2023 முதல் இந்த அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு, இதுவரை 1.3 இலட்சம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், ஒப்பந்தங்களில் மின்னணு வங்கி உத்தரவாத முறை மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளத்தில் இந்த அரசால் அறிமுகப்படுத்தப்படும். இந்த முன்னெடுப்புகளின் தொடர்ச்சியாக, இ-சேவை மையங்களின் வாயிலாக 01-07-2024 முதல் அனைத்து துறைகளின் ஒப்பந்தக்காரர்கள் பதிவும் மின்னணு முறையில் மேற்கொள்ளப்படும்.

## பகுதி-ஆ

## மாநில அரசின் நிதிநிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

192. நான் இதுவரை இந்த அரசின் முக்கிய சீர்திருத்தங்களையும் முன்முயற்சிகளையும் எடுத்துரைத்துள்ளேன். தற்போது மாநிலத்தின் ஒட்டுமொத்த நிதி நிலைமையை விளக்க விழைகிறேன்.

193. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ஒன்றிய அரசிடமிருந்து ஒப்புதல் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுவதால், அத்திட்டத்திற்கான முழுச் செலவையும் மாநில அரசு தனது நிதியிலிருந்து ஏற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக அரசிற்கு நடப்பு ஆண்டில் 9,000 கோடி ரூபாய் செலவினம் ஏற்பட்டுள்ளது. மேலும், 30.06.2022 முதல் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு நிறுத்தப்பட்டதால் ஆண்டொன்றுக்கு சுமார் 20,000 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய சவால்கள் நிறைந்த

சூழ்நிலையில், 2023-24 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கடந்த மார்ச் மாதம் தாக்கல் செய்யப்பட்டது.

194. நடப்பு ஆண்டில் ஏற்பட்ட இரு தொடர் பேரிடர்கள் ஏற்படுத்திய பாதிப்பு, இந்த சூழ்நிலையை மேலும் மோசமடையச் செய்து, மாநிலத்தின் நிதி நிலைமையை கடுமையாக பாதித்துள்ளது. தேவையான நிவாரணத் தொகையை வழங்குவதற்கும், தற்காலிக மற்றும் நிரந்தர சீரமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்கும் எதிர்பாராச் செலவினம் ஏற்பட்டுள்ளதுடன், குறிப்பிடத்தக்க அளவில் வருவாய் இழப்பும் ஏற்பட்டுள்ளது. பல முறை ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து எந்தவொரு நிதியையும் மாநில அரசுக்கு இதுவரை வழங்கவில்லை.

195. மாநிலத்தின் எதிர்பார்ப்பிற்கு நேர்மாறாக, மாநில அரசின் நிதிநிலையை மேலும் பாதிக்கும் வகையில், கடன் வாங்கும் வரம்பு குறித்து ஒன்றிய அரசு கடுமையான நிபந்தனைகளை விதிப்பதன் மூலம், வளர்ச்சித் திட்டங்களுக்காக நிதி ஆதாரங்களை திரட்டும் மாநில அரசின் அதிகாரத்தையும் ஒன்றிய அரசு கட்டுப்படுத்துகிறது.

196. இத்தகைய கடுமையான நிபந்தனைகளுள் ஒன்றின் விளைவாக, நடப்பு ஆண்டில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு மாநில அரசு, இழப்பீட்டு நிதியாக 17,117 கோடி ரூபாயை வழங்கியுள்ளது. இந்த நிபந்தனையை நிறைவேற்றத் தவறும் நேர்வில், அதற்கு இணையான தொகை நமது கடன் வாங்கும் வரம்பிலிருந்து கழிக்கப்படும். மேலும், இதேபோன்று அடுத்த நிதியாண்டிலும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு இழப்பீட்டு நிதியாக 14,442 கோடி ரூபாய் வழங்கப்பட வேண்டும். மின் துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு இந்த அரசு உறுதிகொண்டுள்ள அதே வேளையில், இத்தகைய நிபந்தனை, மாநில அரசின் நிதி நிலையின் மீது பெரும் சுமையை ஏற்படுத்தி, வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டை பாதிக்கிறது. கடந்தகாலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட உதய் (UDAY) திட்டத்தினைப் போன்று, இந்தத் தொகையினையும் நிதிப் பற்றாக்குறை மற்றும் கடன் உச்சவரம்பு கணக்கீட்டிலிருந்து நீக்கம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை மாநில அரசு ஒன்றிய அரசிடம் முன்வைத்துள்ளது.

197. இச்சூழ்நிலையில், 2023-24 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3,08,056 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ள வருவாய் செலவினங்கள், திருத்த மதிப்பீடுகளில் 3,17,484 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்கு 15,594 கோடி ரூபாய் நிதி இழப்பீடு, பேரிடர் நிவாரண உதவி மற்றும் சீரமைப்புச் செலவினங்களுக்காக 2,041 கோடி ரூபாய் ஆகியவற்றால் வருவாய்ச் செலவினத்தில் உயர்வு ஏற்பட்டபோதிலும், திறன்மிக்க நிதி மேலாண்மை மூலம், வருவாய் செலவினங்களின் உயர்வு 9,428 கோடி ரூபாய் அளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

198. வருவாய் வரவுகளை பொறுத்தவரையில், 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,81,182 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட மாநிலத்தின் சொந்த வரி வருவாய், திருத்த மதிப்பீடுகளில் 1,70,147 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இயற்கைப் பேரிடர்களின் தாக்கத்தினால், 2023-24 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 20.61 சதவீதம் என எதிர்பார்க்கப்பட்ட வரி வருவாயின் வளர்ச்சி,

திருத்த மதிப்பீடுகளில் 13.26 சதவீதம் எனக் குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

199. மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய், 2023-24 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் கணிசமாக உயர்ந்து, திருத்த மதிப்பீடுகளில் 30,381 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. வரிவிகிதங்களைச் சீரமைத்தல், வசூலிக்கும் திறனை மேம்படுத்துதல் போன்ற இவ்வரசால் மேற்கொள்ளப்பட்ட வருவாயை அதிகரிக்கும் முயற்சிகளின் விளைவாக இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது.

200. ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் மற்றும் மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு ஆகியவை ஒன்றிய அரசின் நிதிப் பங்கீட்டில் அடங்கும். ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள், 2023-24 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 26,996 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2023-24 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டை விட சிறிதளவு குறைவானதாகும். வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 41,665 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்த ஒன்றிய அரசின் வரிகளில் மாநில அரசின் பங்கு,

திருத்த மதிப்பீடுகளில் 45,053 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஒன்றிய அரசு தனது வரி வசூல் அதிகரிக்கும் என்று எதிர்பார்த்ததன் அடிப்படையில் திருத்த மதிப்பீடுகளில் இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது.

201. ஒட்டு மொத்தமாக 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 37,540 கோடி ரூபாயாக இருந்த வருவாய் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில், திருத்த மதிப்பீடுகளில் வருவாய் பற்றாக்குறை 44,907 கோடி ரூபாயாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் 36,017 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கான இழப்பீட்டு நிதி நீங்கலான வருவாய்ப் பற்றாக்குறை திருத்த மதிப்பீடுகளில் 27,790 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. பேரிடர்களின் விளைவாக வருவாயிலும் செலவினங்களிலும் பாதகமான விளைவுகள் ஏற்பட்ட போதிலும், வருவாய் பற்றாக்குறையை அரசு திறன்பட நிருவகித்துள்ளது.

202. 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 44,366 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்த

மூலதன செலவினங்கள், திருத்த மதிப்பீடுகளில் 42,532 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10,169 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்த நிகரக்கடன்கள் மற்றும் முன்பணங்கள் திருத்த மதிப்பீடுகளில் 6,624 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இரு தொடர் பேரிடர்கள் ஏற்பட்டதன் விளைவாக திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதில் ஏற்பட்ட தொய்வே இதற்குக் காரணமாகும்.

203. 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 92,075 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட நிதிப் பற்றாக்குறை திருத்த மதிப்பீடுகளில் 94,060 கோடி ரூபாயாக சிறிதளவு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளதன் காரணமாக, 2023-24ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 3.25 சதவீதமாக மதிப்பிடப்பட்ட நிதிப்பற்றாக்குறை திருத்த மதிப்பீடுகளில் 3.45 சதவீதமாக அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

204. தற்போது நான் 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை விளக்க விழைகிறேன்.

205. மாநிலப் பொருளாதார வளர்ச்சி, வரி விகிதங்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் வரி வசூலில் திறன் மேம்பாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, 2024-25 ஆம் ஆண்டிற்கான மாநிலத்தின் சொந்த வரி வருவாய் மதிப்பீடுகள் 14.71 சதவீதம் வளர்ச்சியுடன் 1,95,173 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் வணிக வரிகள் மூலம் 1,43,381 கோடி ரூபாய், முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலம் 23,370 கோடி ரூபாய், மாநில ஆயத்தீர்வைகள் மூலம் 12,247 கோடி ரூபாய் மற்றும் வாகனங்கள் மீதான வரிகள் மூலம் 11,560 கோடி ரூபாய் அடங்கும். மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாயில் காணப்படும் வளர்ச்சி அதே அளவில் நீடிக்கும் என்ற எதிர்பார்ப்பில் 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 30,728 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

206. வரும் நிதியாண்டில், சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடு முற்றிலும் நின்று விடும் என்பதால்,

2023-24 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது, 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் குறைத்து 23,354 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டிற்கான ஒன்றிய அரசின் ஒதுக்கீடுகளின் அடிப்படையில், 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒன்றிய அரசின் வரிகளில் மாநில அரசின் பங்கு 49,755 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

207. 2024-25ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், மொத்த வருவாய்ச் செலவினம் 3,48,289 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. பொறுப்பேற்ற செலவினங்களான சம்பளங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் வட்டித் தொகை வழங்குவதற்கான மதிப்பீடுகள் அதிகரித்துள்ளது. மானியங்கள் மற்றும் உதவி மானியங்கள் வழங்குவதற்கான மதிப்பீடுகள் 1,46,908 கோடி ரூபாய் என உயர்த்தி மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை முதல் முறையாக

முழு ஆண்டிற்கும் செயல்படுத்த உள்ளதால் ஏற்படும் கூடுதல் செலவினம் 5,696 கோடி ரூபாய் ஆகும்.

208. ஒட்டு மொத்தமாக, 2024-25 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இழப்பீட்டிற்கான நிதி 14,442 கோடி ரூபாயையும் சேர்த்து வருவாய்ப் பற்றாக்குறை 49,279 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இழப்பீட்டுத் தொகை நீங்கலாக, வரும் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை 34,837 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வருவாய்ப் பற்றாக்குறை, 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான இழப்பீட்டு நிதி நீங்கலான வருவாய்ப் பற்றாக்குறையை விட குறைவாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

209. 2024-25ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மூலதனச் செலவினம் 47,681 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2023-24 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது 12.11 சதவீத வளர்ச்சி

கொண்டதாகும். சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான செலவினம் 9,000 கோடி ரூபாயிலிருந்து 12,000 கோடி ரூபாயாக அதிகரித்ததன் காரணமாக நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் 11,733 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. கட்டமைப்புத் திட்டங்களில் பெருமளவில் முதலீடு செய்வதுடன், மாநிலத்தின் மூலதனச் செலவினத்தை அதிகரிப்பதிலும் இந்த அரசு உறுதியாக உள்ளது.

210. மொத்தத்தில், நிதிப்பற்றாக்குறை 1,08,690 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.44 சதவீதம் ஆகும். பதினைந்தாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், **மாநிலத்தின் வளர்ச்சியைப் பாதிக்காமல் நிதிப்பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தும் சீரிய நிதி நிருவாக மேலாண்மையை இந்த அரசு கடைப்பிடித்து, 2022-23 ஆம் ஆண்டில் 3.46 சதவீதமாக இருந்த நிதிப்பற்றாக்குறையை 2023-24ஆம் ஆண்டில் 3.45 சதவீதமாகவும், 2024-25 ஆம் ஆண்டில் 3.44 சதவீதமாகவும் குறைத்துள்ளது. மாநிலத்தின் வரவு-செலவுத் திட்ட வருவாய் ஆதாரங்களில் இருந்தே தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்**

**பகிர்மானக் கழகத்திற்கு இழப்பீட்டு நிதி வழங்கிய பின்பும் பேரிடர்களால் கடும் பாதிப்பைச் சந்தித்தபோதிலும் நிதிப்பற்றாக்குறையைக் குறைத்து இந்த அரசு சாதனை புரிந்துள்ளது. பல்வேறு சவால்களுக்கு இடையிலும், திறன்மிகு நிதி மேலாண்மையை உறுதியாகக் கடைப்பிடித்து, அதே நேரத்தில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இந்த அரசு உறுதி கொண்டிருப்பதை தடைகளைத் தாண்டி வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கும் இந்த வரவு-செலவுத் திட்டம் கோடிட்டுக் காட்டுகிறது.**

211. அண்மையில், பதினாறாவது நிதிக்குழுவை ஒன்றிய அரசு அமைத்துள்ளது. தமிழ்நாடு போன்ற வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கு ஒன்றிய அரசின் வரிகளைப் பகிர்ந்தளிப்பதில் முந்தைய நிதிக்குழுக்களால் இழைக்கப்பட்டுள்ள வரலாற்று அநீதியை, டாக்டர். அரவிந்த் பனகாரியாவின் தலைமையில் உள்ள நிதிக்குழுவினால் சரி செய்யப்படும் என்று இந்த அரசு நம்புகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் காரணங்கூறாமல், நாட்டின் வளர்ச்சிக்குக் கைகொடுக்கும் வகையில் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய உரிய

நிதியை உறுதிசெய்யும் நியாயமான முறையை நாங்கள் எதிர்நோக்குகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

212. இந்தியத் திருநாடு விடுதலை பெற்றபின் நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்களும் தங்களுக்கான வளர்ச்சிப் பாதையை வகுத்துக் கொள்ளத் தொடங்கின. எனினும் சமூக முன்னேற்றத்திலும், பொருளாதார வளர்ச்சியிலும் தமிழ்நாடு முன்னேற்றம் அடைந்த விதம் குறித்து உலகப் பொருளாதார அறிஞர்களும், அமைப்புகளும் பாராட்டிப் போற்றுகின்றனர். **தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்து நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் அவர்கள் குறிப்பிட்டதை இப்பேரவையில் பதிவு செய்திட விரும்புகிறேன்.**

"Tamil Nadu is one of the states which had achieved rapid progress within a relatively short period despite it starting from appalling levels of poverty, deprivation and inequality. Tamil Nadu initiated bold social

programmes and has some of the best public services among all Indian States and many of them are accessible to all on a non-discriminatory basis. Tamil Nadu has one of the highest per capita income and lowest poverty rates among all Indian States. This is an important example of the complementarity between economic growth and public support."

213. கடந்த 75 ஆண்டுகளில் நாட்டின் சில மாநிலங்கள் பொருளாதார வளர்ச்சி மட்டும் அடைந்தன. மற்ற சில மாநிலங்கள் கல்வி, சுகாதாரம் என சமூகக் குறியீடுகளில் மட்டும் முன்னேற்றம் அடைந்தன. மாற்றாக சமூக முன்னேற்றம், தொழில் வளர்ச்சி என அனைத்து தளங்களிலும் பெருவளர்ச்சி பெற்று தமிழ்நாடு தன் முத்திரையைப் பதித்துள்ளது.

குறிப்பிட்டுச் சொல்வது என்றால்,

- ❖ ஏற்றுமதி தயார்நிலைக் குறியீட்டில் நாட்டிலேயே முதலிடம்

- ❖ மின்னணுப் பொருட்கள், மோட்டார் வாகனங்கள் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் நாட்டில் முதலிடம்.
- ❖ புத்தொழில் சூழல் அமைவுக்கான தரவரிசையில் முன்னணி மாநிலம்.
- ❖ தொழிற்சாலைகளில் பணிபுரியும் மகளிரின் பங்கேற்பு நாட்டிலேயே முதன்மை.
- ❖ உயர் கல்விச் சேர்க்கையில் நாட்டில் முதலிடம்.
- ❖ தேசிய தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 146 கல்வி நிறுவனங்கள் இடம்பெற்று நாட்டிலேயே முதலிடம்.

214. இவ்வாறு உலகமே வியந்து பாராட்டும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த தலைவர்கள் பலரும் இம்மாமன்றத்தில் ஓவியமாக உறைந்து நின்றாலும், நம் எண்ணங்களில் என்றென்றும் நிறைந்து நம்மை வழிநடத்திக் கொண்டே இருக்கிறார்கள். அந்த வழியில் நமது மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நாமெல்லாம் பணியாற்றுவது நமக்குக் கிடைத்த பெருமை.

**"காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி**
**அளிதோ தானே; அது பெறல் வருங் குரைத்தே"**
**(புறம் – 5)**

'**ஓர் அரசன் தன்னுடைய குடிமக்களை, ஒருதாய் தன்னுடைய குழந்தையைக் காப்பது போல் பாதுகாத்திடவேண்டும்**' என புறநானூறுப் பாடல் ஒன்று அழகுற விளக்குகிறது. அதே வழியில் நல்லாட்சி நடத்திவரும் நமது மாண்புமிகு முதலமைச்சரின் பாதுகாப்பான கரங்களைப் பற்றி தமிழ்நாட்டின் மக்கள் தன்னம்பிக்கையுடன் தங்களுடைய வெற்றிப் பயணத்தை தொடர்ந்து வருகின்றனர்.

215. இந்த வரவு-செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு அயராது உழைத்த நிதித்துறையின் முதன்மைச் செயலாளர் திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும் நிதித்துறையின் பிற அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

216. இந்த வரவு-செலவுத் திட்டத்தினைச் செதுக்கிடத் தேவையான பல ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் எனது மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

217. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்!

வெல்க தமிழ்நாடு!

**திரு. தங்கம் தென்னரசு**

நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்
துறை அமைச்சர்

சென்னை
2024 ஆம் ஆண்டு
பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள்
மாசித் திங்கள் 7 ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2055

## இணைப்பு

## இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (1)-இன்படி, வரவு-செலவுத் திட்ட அறிக்கையுடன், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும், மாநில அரசு சட்டமன்றப் பேரவையில் வைக்க வேண்டும். இச்சட்டத்தின், 3 ஆம் பிரிவின் உட்பிரிவு (2)-இன்படி, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை மற்றும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் போன்ற நிதி நிலைக் குறியீடுகளுக்கான இலக்குகளை அடுத்தடுத்து வரும் ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டும், அவற்றின் கணக்கீட்டிற்கான அனுமானங்களைத் தெளிவாக விளக்கியும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மேற்சொன்ன விதிகளுக்கிணங்கி, 2024-25 ஆம் ஆண்டு முதல் 2026-27 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு

இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

**நோக்கங்கள்**

நிதி ஒருங்கிணைப்பு மற்றும் கடன் திருப்பிச் செலுத்தும் திறனை மேம்படுத்துவதை இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் இலக்காகக் கொண்டு அதனை அடையத் தேவையான நடவடிக்கைகளை வழிகாட்டுகிறது. பதினைந்தாவது நிதிக் குழுவால் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பின்வரும் நிதி மேலாண்மை விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் இந்த நோக்கம் அடையப்படும்.

❖ 2023-24 ஆம் நிதியாண்டு முதல் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை 3 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும். மின்துறை சீர்திருத்தங்களை நிறைவேற்றும்பட்சத்தில் 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டுவரை நான்கு ஆண்டுகளுக்கு மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 0.5 சதவீதம் கூடுதல் கடன் பெறலாம்.

- மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், நிலுவைக் கடன் தொகை 2024-25 ஆம் நிதியாண்டில் 28.9 சதவீதத்திற்குள்ளும், 2025-26 ஆம் நிதியாண்டில் 28.7 சதவீதத்திற்குள்ளும் இருக்க வேண்டும்.

**பொருளாதார நிலை**

ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் அண்மையில் வெளியிட்டுள்ள மதிப்பீடுகளின்படி, நிலையான விலையில் தேசிய அளவிலான 7.24 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, 2022-23 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 8.19 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது.

2023-24 ஆம் ஆண்டில், இந்தியப் பொருளாதாரம் நிலையான விலையில் 7.3 சதவீதமாக வளர்ச்சியடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டின் பணவீக்கத்தினையும் கருத்தில் கொண்டால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் நடப்பு விலையில் 13.5 சதவீதம் இருக்கும் என அனுமானிக்கலாம். நாட்டின் வளர்ச்சி இயந்திரமாக தமிழ்நாடு உள்ள நிலையில், 2023-24ஆம் ஆண்டில் மாநிலத்தின் பெயரளவு பொருளாதார

வளர்ச்சி விகிதம் 15.14 சதவீதமாக இருக்குமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முதலீடுகளை ஈர்ப்பதற்கும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், முழுமையான, நிலைத்திருக்கும் வளர்ச்சியை உறுதிசெய்ய அரசு முன்னெடுத்து வரும் கொள்கை முன்முயற்சிகள் மற்றும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளால் 2024-25 ஆம் ஆண்டில், நடப்பு விலையில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சியானது 15.89 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்தடுத்த ஆண்டுகளில், நடப்பு விலையில் மாநில மொத்த உற்பத்தியின் வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 16 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## I. வருவாய் வரவினங்கள்

ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வு உட்பட, மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 2023-24 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் கணிக்கப்பட்ட வரவினமான 2,72,576.80 கோடியைக் காட்டிலும் 2024-25 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,99,009.98 கோடி ரூபாயாக

இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடுகள் 2025-26 ஆம் ஆண்டில் 3,41,851.96 கோடி ரூபாயாகவும் 2026-27 ஆம் ஆண்டில் 3,94,972.15 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2025-26 மற்றும் 2026-27 ஆம் ஆண்டுகளுக்கு 14.33 சதவீதம் மற்றும் 15.54 சதவீத வளர்ச்சியைக் குறிக்கிறது. இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

1. **மாநில அரசின் சொந்த வரி வருவாய்**

மாநில அரசின் சொந்த வரி வருவாய், 2023-24 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 1,70,147.24 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்தது. 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது 1,95,172.99 கோடி ரூபாயாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் 2025-26 ஆம் ஆண்டில் 2,26,400.67 கோடி ரூபாயாகவும், 2026-27 ஆம் ஆண்டில் 2,67,152.79 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2025-26 ஆம் ஆண்டில் 16 சதவீதம் எனவும் 2026-27 ஆம் ஆண்டில் 18 சதவீதம் எனவும்,

தற்போதைய வரிவசூல் மற்றும் எதிர்வரும் பொருளாதாரச் சூழலை கருத்திற்கொண்டு மதிப்பிடப்பட்டுள்ளது:-

2. **வரி அல்லாத வருவாய்**

2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் 30,727.82 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய் இனங்களை பெருக்க எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கையினாலும், வரியல்லாத வருவாய் வசூலை மேம்படுத்தும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாலும், 2023-24 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது இம்மதிப்பீடுகள் 1.14 சதவீத வளர்ச்சியுடன் அதிகரித்துள்ளது. மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் 2025-26 ஆம் ஆண்டில் 32,264.21 கோடி ரூபாயாகவும், 2026-27 ஆம் ஆண்டில் 33,554.78 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. **ஒன்றிய வரிகளில் மாநில அரசின் பங்கு**

2023-24 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், 45,052.52 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டிருந்த ஒன்றிய வரிகளில் மாநில அரசுக்கான பங்கு 2024-25 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒன்றிய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் உள்ள மதிப்பீடுகளின் அடிப்படையில், இது 49,754.95 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2025-26 மற்றும் 2026-27 ஆம் ஆண்டுகளுக்கான வளர்ச்சி வீதம் 16.50 சதவீதமாக இருக்குமென கருதி, ஒன்றிய அரசின் வரிவருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 2025-26 ஆம் ஆண்டிற்கு 57,964.52 கோடி ரூபாயாகவும், 2026-27 ஆம் ஆண்டிற்கு 67,528.66 கோடி ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

4. **ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்**

2024-25 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியம் 23,354.22 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2025-26 மற்றும் 2026-27 நிதியாண்டுகளுக்கு, உதவி மானியம் முறையே

25,222.56 கோடி ரூபாய் மற்றும் 26,735.91 கோடி ரூபாயாகக் கணிக்கப்பட்டுள்ளது.

## II. வருவாய் கணக்கில் செலவுகள்

2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வருவாய் செலவினங்கள் 3,48,288.72 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2023-24 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளைக் காட்டிலும் 9.70 சதவீதம் அளவிற்கு அதிகமாக உள்ளது. வருவாய் செலவினம் 2025-26 ஆம் ஆண்டில் 3,59,949.99 கோடி ரூபாயாகவும், 2026-27 ஆம் ஆண்டில் 3,89,005.49 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முக்கியக் கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

❖ பொறுப்பேற்ற ஊதியச் செலவினங்களுக்காக 2024–25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 84,931.60 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2023-24 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டைக் காட்டிலும் 12.42 சதவீதம்

அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது. அகவிலைப்படி உயர்வு மற்றும் எதிர்பார்க்கப்படும் புதிய பணியாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் ஊதியங்களுக்கான செலவினம் 2025-26 ஆம் ஆண்டு மற்றும் 2026-27 ஆகிய ஆண்டுகளுக்கு முறையே 91,726.13 கோடி ரூபாய் மற்றும் 99,064.22 கோடி ரூபாய் என எதிர்பார்க்கப்படுகிறது.

- 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், சம்பளம் அல்லாத, செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பிற்கான செலவினம் 15,013.46 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினம், 2025-26 ஆம் ஆண்டில் 15,614.00 கோடி ரூபாயாகவும், 2026-27 ஆம் ஆண்டிற்கு 16,238.56 கோடி ரூபாயாகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- பொறுப்பேற்ற ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களுக்கான மதிப்பீடு 2024-25 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 37,663.56 கோடி ரூபாயாக

இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் ஓய்வுபெறுவோரின் எண்ணிக்கையின் அடிப்படையில், ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களின் கீழ் வரும் செலவினங்கள், 2025-26 ஆம் ஆண்டில் 41,429.91 கோடி ரூபாயும், 2026-27 ஆம் ஆண்டில் 45,572.91 கோடி ரூபாயும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2024-25 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மானியங்கள் மற்றும் நிதி மாற்றங்களுக்கான செலவினம் 1,46,908.19 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2025-26 மற்றும் 2026-27 ஆம் ஆண்டுகளுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மானியங்கள் மற்றும் நிதி மாற்றங்களுக்கான செலவினம் முறையே 1,40,253.60 கோடி ரூபாய் மற்றும் 1,51,473.88 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. மகளிர் உரிமைத் தொகை தொடர்ந்து வழங்கவும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கான இழப்பீட்டு நிதி

குறையும் என்ற எதிர்பார்ப்பினையும் மற்றும் கூடுதல் போக்குவரத்துக்கான மானியங்கள் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பினையும் கருத்திற்கொண்டு செலவினங்கள் கணிக்கப்பட்டுள்ளது.

❖ முந்தைய ஆண்டுகளில் திரட்டப்பட்ட பொதுக் கடனுக்காகச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2024-2025 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வட்டி செலுத்துதலுக்கான செலவினம் 63,722.24 கோடி ரூபாயாகும். இந்த செலவினம் 2025-26 ஆம் ஆண்டில் 70,876.73 கோடி ரூபாய் மற்றும் 2026-27 ஆம் ஆண்டில் 76,598.91 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## III. மூலதனக் கணக்கு

2023-24 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 42,531.68 கோடி ரூபாயைக் காட்டிலும் 2024-25 ஆம்

ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 47,681.30 கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 2023-24 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளைக் காட்டிலும் 12.11 சதவீதம் அதிகமாக உள்ளது. மூலதனச் செலவினம் 2025-26 ஆம் ஆண்டில் 66,753.83 கோடி ரூபாய் எனவும் 2026-27 ஆம் ஆண்டில் 96,793.05 கோடி ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் செலவினங்கள் மற்றும் மெட்ரோ ரெயில் பணிகள் உள்ளிட்ட மூலதனச் செலவினங்கள் அதிகரித்துள்ளதால், மூலதனச் செலவினங்களுக்கான ஒட்டுமொத்த மதிப்பீடுகள் உயர்ந்துள்ளன. மாநிலத்தின் நிதி ஒழுக்கத்தை பராமரிக்கும் அதேவேளையில் வளர்ச்சிக்கான செலவினங்களை தொடர்ந்து அதிகரிப்பதில் இந்த அரசு கொண்டுள்ள உறுதியை இது காட்டுகிறது. நிகரக்கடன்களும் முன்பணங்களும் 2024-25 வரவு-செலவுத் திட்டத்தில் 11,733.25 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிகரக் கடன்களும் முன்பணங்களும் 2025-26 ஆம் ஆண்டில் 23,466.50 கோடி ரூபாயாகவும்

2026-27 ஆம் ஆண்டில் 32,853.09 கோடி ரூபாயாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## IV. வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை

2024-25 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை 49,278.73 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. வரிவசூலை மேம்படுத்துதல், வரி விகிதங்களை சீரமைத்தல் உள்ளிட்ட வருவாயைப் பெருக்கும் நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு, வருவாய்ப் பற்றாக்குறை 2025-26 ஆம் ஆண்டில் 18,098.03 கோடி ரூபாயாக குறையும் எனவும், அதன் தொடர்ச்சியாக 2026-27 ஆம் ஆண்டில் 5,966.67 கோடி ரூபாய் வருவாய் உபரிக்கு வழிவகுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இது கூடுதல் மூலதனச் செலவினத்திற்கு வழிவகை செய்யும்.

15வது நிதிக்குழு, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப்பற்றாக்குறையின் விகிதத்தை 2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டுகளுக்கு 3.0 சதவீதமாக மாநில அரசுகளுக்கு அனுமதி அளித்துள்ளது. மேலும், மின்துறை சீர்திருத்தங்களை

நிறைவேற்றும்பொருட்டு 2021-22 ஆம் ஆண்டு முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 0.5 சதவீதம் கூடுதலாக பெறுவதற்கு வழிவகை செய்துள்ளது. 2024-25 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப்பற்றாக்குறை விகிதம் 3.44 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2025-26 ஆம் ஆண்டில் 2.96 சதவீதம் மற்றும் 2026-27 ஆம் ஆண்டில் 2.90 சதவீதமாக இருக்கும். இது 15வது நிதிக்குழு பரிந்துரைத்த இலக்கிற்குள் உள்ளது.

## V. கடன்கள்

ஒன்றிய அரசு நிர்ணயிக்கும் ஒட்டுமொத்தக் கடன் வரம்பின் அடிப்படையில், கடன் பெறுதலும் திரும்பச் செலுத்துதலும் மதிப்பிடப்பட்டுள்ளன. 2024-25 ஆம் ஆண்டில் மாநில அரசு 1,55,584.48 கோடி ரூபாய் அளவிற்கு மொத்தக் கடன் பெற திட்டமிட்டுள்ளது. மேலும், 49,638.82 கோடி ரூபாய் மதிப்பிலான பொதுக் கடனை அரசு திருப்பிச் செலுத்தும். இதன் விளைவாக, 31.03.2025 அன்று நிலுவையில் உள்ள கடன்

8,33,361.80 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. 2024-25 ஆம் ஆண்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் இது 26.41 சதவீதம் ஆகும். மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிலுவையிலுள்ள மொத்தக் கடன் விகிதம் 2025-26 ஆம் ஆண்டில் 25.75 சதவீதமாகவும், 2026-27 ஆம் ஆண்டில் 25 சதவீதமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 15-வது நிதிக்குழு பரிந்துரைத்த இலக்கிற்குள் உள்ளது. இவ்வாறு, சீரிய நிதி மேலாண்மையின் ஒரு பகுதியாக கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான திறனை தக்கவைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

## VI. கடன் உத்திரவாதங்கள்

ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவு அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 10 சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 43.72 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த

உற்பத்தி மதிப்பீட்டில் 3.84 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதம் அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 2023 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 15.57 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 1.37 சதவீதமாகவும் உள்ளது.

**முடிவுரை**

தற்போது நிலவும் பொருளாதாரச் சூழலில், தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிட அதிகமாக உள்ளது, நமக்கு சாதகமானதாகும். நமது உயர் வளர்ச்சி வீதம் வரும்

காலங்களிலும் தொடரும். நிதி ஆதாரங்களைப் பெருக்கியும், வரி வசூல் திறனை அதிகரித்தும், மாநிலத்தின் மொத்த வருவாயின் உயர் வளர்ச்சி வீதத்தை தக்கவைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நிதி ஒருங்கிணைப்பை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு, தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமைச் சட்டத்தின் வரையறைகளின் படி, எதிர்வரும் ஆண்டுகளில் வருவாய்ப் பற்றாக்குறை இல்லாத மாநிலமாக மாற்றுவதற்கும், மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களுக்குத் தேவைப்படும் கூடுதல் மூலதன மற்றும் வருவாய்ச் செலவினங்களை மேற்கொள்வதற்கும் இந்த அரசு தொடர்ந்து முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்.

*********